Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 316 | புதன்கிழமை | புரட்டாதி 27 ஆம் நாள் 13 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 671 சாவு 23

கொழும்பு, ஒக். 13
இலங்கையில் நேற்று 671 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் 13

### சகல மக்களினதும் உரிமைகளை உள்வாங்கி

# இந்த வருட இறுதிக்குள்ளாவது புதிய அரசமைப்பை உருவாக்குக!

### கோத்தாபயவின் உரை தொடர்பில் இரா. சம்பந்தன் வலியுறுத்தல்



**கொழும்பு, ஒக்ரோபர் 13**

**சகல மக்களினதும் உரிமைகளையும் உள்வாங்கிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. அதுவும் இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்."** 15

கிளிநொச்சி வடக்கு வலய

### கல்விப் பணிப்பாளராக கந்ததாசன் நியமனம்

சாவகச்சேரி, ஒக்.13
வடக்கு மாகாணத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் முதலாவது வலயக் கல்விப்பணிப்பாளராக நாகப்பன் கந்ததாசன் நியமிக்கப்பட்டு, நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.
கிளிநொச்சி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவந்த நிலையில், அவர் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (த-9)

### எரிபொருள் விலையை அதிகரிக்கவும்

ஐ.ஓ.சி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 13
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், தனது விநியோக நிலையங்கள் 15

முச்சந்தி முரளி




### கைவிடப்படும் காஸ் சிலிண்டர்; மவுசு கூடுகின்றது குக்கருக்கு!

கொழும்பு, ஒக். 13
நாட்டில்எரிவாயுவிலைஉயர்த்தப்பட்டதால், எரிவாயுவுக்கு ( காஸ் சிலிண்டர்கள்) பதிலாக மக்கள் மண்ணெண்ணெய் அடுப்புகளைப்பயன்படுத்தத் தொடங்கி விட்ட னர். கொழும்பிலுள்ள 15



### எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டாம்

ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஒக். 13
பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய வற்றின் விலையை இப்போ 15

### அரசு செத்துவிட்டது!

ஐ.ம.ச. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13
மக்கள் ஆணைக்குப் புறம்பாகவே இந்த அரசு செயற்படுகின்றது. எனவே, மக்களின் மனநிலைமை 15

வெளிநாடு செல்ல முற்பட்ட

### வடக்கைச் சேர்ந்த 65 பேர் திருகோணமலையில் கைது

திருகோணமலை, ஒக். 13
சட்டவிரோதமாக வெளிநாட்டுக் குச்செல்ல முயற்சித்தனர் என்ற 15

### எரிபொருள் விலை மாற்றம் தவிர்க்க முடியாததொன்று!

*அடுத்த அதிகரிப்புக்கான சமிக்ஞையை வெளியிட்டது அரசு*

கொழும்பு, ஒக். 13
"எரிபொருள் விலையில் நிச்சயம் மாற்றம் வரும். தற்போதைய சூழ்நிலையில் அது 15

பிரதமருடன் கலந்துரையாடல்:

### ஆசிரியர்களின் போராட்டம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது?

கொழும்பு, ஒக். 13
சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். எனினும், அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதை நாளை (இன்று) தீர்மானிக்கவுள்ளோம் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வஜனவாக்கெடுப்பை வடக்கு கிழக்கில் நடத்தவும்

## குவாட் அமைப்பிடம் சிவாஜி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

ஐக்கிய நாடுகள் சபை வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளக்கிய குவாட் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று, தமிழ்த் தேசியக் கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையிலுள்ள தனது இல்லத்தில் அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பான கடிதம் ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று நாடுகளின் தூதரகங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தக் கடிதம் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

அனுப்பப்பட்ட அந்த கடிதத்தில்,

1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக, நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் முறைமையானது இலங்கையில் 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமானது தேர்தலை நடத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல், பதிலாக சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய பிராந்தியத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது.

குறித்த உடன்படிக்கையின் மூலமாகக்கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை இலங்கையானது எப்பொழுதுமே முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. தற்பொழுது அதனை மேலும் பலமிழக்கச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதேசமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம் மிகுந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர். - என்றார். (த-26)

# 60 வயதுக்கு மேற்பட்டோர் உடன் தடுப்பூசி பெறுங்கள்

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13



60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் எவராவது தடுப்பூசியைப் பெறவில்லையாயின் உடனடியாக தடுப்பூசியைப் பெறவேண்டும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கொரோனாப் பெருந்தொற்றின் மூன்றாவது அலை இலங்கையில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது. தொற்றுக்கு உள்ளாவதால் இறப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் அதிகம் உள்ளவர்கள் மத்தியில் வயது வந்தவர்கள் மிகமுக்கியமான தரப்பினராவர். இலங்கையில் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இறந்தவர்களில் 77.1 வீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். எனவே முதியவர்கள் இந்தப் பெருந்தொற்றால் இறவாமல் இருப்பதற்கு எம்முன்னுள்ள ஒரேயொரு உபாயம் தடுப்பூசிகளை அதிகம் பெற்றுக்கொடுப்பதே.

ஆனால் வருந்தத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான வயது வந்தவர்கள் தடுப்பூசியைப் பெறவில்லை. தடுப்பூசி தொடர்பான தப்பான அபிப்பிராயமும் பைஸருக்கான காத்திருப்பும் தான் இந்தத் தாமதத்துக்கான முக்கிய காரணம். முதலிரண்டு டோஸ்களில் சினோபார்மை எடுத்தவர்களுக்கே மூன்றாவதாக (பூஸ்டர்) பைஸர் கிடைக்கும்.

எனவே யாழ் மாவட்டத்தில் இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் சிறப்புச் செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. இதுவரை தடுப்பூசியைப் பெறாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நாளை முதல் (இன்று) எதிர்வரும் 16ஆம் திகதி வரை தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ம)

# பெரிய வெங்காயத்தின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.13

ஒரு கிலோ கிராம் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்துக்கு 40 ரூபா வரி விதிப்பதற்கு அரசு அண்மையில் முடிவு செய்ததை அடுத்து, உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களில், ஒரு கிலோகிராம் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை 200 ரூபாவைக் கடக்கும் என்று தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-4)

# விலையேற்றம் தொடர்பில் பேச்சுக்கு வாருங்கள்

## ஜனாதிபதிக்கு பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஒக்.13

பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள் ளது.

தற்போதைய சூழ்நிலையில் அனைத்து உணவகங்களுக்கும் அரசாங்கத்தின் ஆதரவு தேவை என்று அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்:

தண்ணீர் அல்லது மின்சாரக் கட்டணம் போன்ற சலுகைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் அல்லது மாதாந்த கொடுப்பனவு வழங்க வேண்டும்.

சமையல் எரிவாயு விலை உயர்வால் உணவகங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களுக்கு அரசாங்கம் எந்தச் சலுகையும் வழங்கவில்லை - என்றார். (ஐ-இ)

## கிளிநொச்சியில்

# காற்றுடன் கூடிய மழை வீடுகளின் கூரைகள் சேதம்





கிளிநொச்சி, ஒக்.13

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னேரி சோலை கிராமத்தில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் சுழல் காற்றுக் காரணமாக நான்கு வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றின் வேலித்தூணும் காற்றால் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன், பயன்தரு மரங்களும் முறிந்துள்ளன.

இதேவேளை ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தில் வீசிய சுழல் காற்றுக் காரணமாக 4 வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டதுடன் குறித்த வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ஐ-113)



# தமிழருக்கு தொடர்ந்தும் உதவவேண்டும் கனடா

## யாழ். மாநகர சபை மேயர் கோரிக்கை

கொழும்பு, ஒக்.13

தமிழ் மக்களுக்காக கனடா தொடர்ந்தும் குரல் கொடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், இலங்கைக்கான கனடாத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மக்னனை, யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் அலுவலகத்தில் சந்தித்தபோதே, மாநகர முதல்வர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்கள் போரால் நீண்ட காலப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை கனடா தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்புத் தொடர்பான விசாரணைகளுக்கும் கனடாவின் ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்கவேண்டும்.

கனடாவின் ரொறண்ரோ மாநகர சபைக்கும், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் இடையே இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ள போதும், அதன் செயற்பாடுகள் பெரியளவில் நடைபெறவில்லை.

கனடா அரசின் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படும் நிலையில், கனடா அரசு தமிழ் மக்களுக்கான தங்கள் பங்களிப்புகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய றோலர்கள் அத்துமீறல் முல்லையில் வலைகள் நாசம்!

முல்லைத்தீவு, ஒக். 13

**முல்லைத்தீவு, கள்ளப்பாட்டு பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நான்கு தொழிலாளர்களின் வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் நாசம் செய்யப்பட்டுள்ளன.**

இவ்வாறு சேதப்படுத்தப்பட்ட வலையின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபா என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத் தலைவரிடம் முறையிட் டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீன வர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இந்திய இழுவைப்படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் உபக ரணங்களை நாசம்செய்து வரு கின்றன. எனினும் அரசும் மீன்பிடித்துறை அமைச்சரும் காத்திரமான நடவடிக்கைகள்



எதையும் எடுக்கவில்லை என்று மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். (ம-19)

*திலீபனை நினைவுகூர்ந்த விவகாரம்*

## கஜேந்திரன் எம்.பியின் கைதுக்கு சாவ. பிரதேச சபையில் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 13

தியாகதீபம் திலீபனை நினைவுகூர்ந்த விவகா ரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந் திரன் கைதுசெய்யப்பட்ட மைக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது.

உறுப்பினர் இயோகேஸ் வரன் இந்த முன்மொ ழிவை சபையில் முன் வைத்தார். அவர் தனது முன்மொழிவில், இறந்த வர்களை நினைவுகூரும் உரிமை அனைவருக் கும் உள்ளது. மக்க ளால் தெரிவு செய்யப் பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது, அவரது சிறப்புரிமை களை மீறும் வகையில், இந்த ஜனநாயக நாட் டில் இத்தனை ஊடகங் கள் மூலம் மக்கள் பார்க் கக்கூடியதாக பகிரங்க மாக பொலிஸார் மிக மோசமான முறையில் நடந்து கொண்டுள்ள மையானது தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ் வுக்கு இங்கு எந்த உத்தி ரவாதமும் இல்லை என் பதை தெட்டத் தெளிவாக காண்பிக்கின்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அமைதி யான முறையில் அஞ் சலி செய்த நாடாளு மன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் அவர்களை குற்றவாளியைப்போல வலுக்கட்டாயமாக பொலிஸார் கைது செய் தமையை இந்த சபை யில் கண்டனத் தீர்மான மாக நிறைவேற்றித் தரு மாறு கோருகின்றேன் என்று - குறிப்பிட்டார்.

நினைவேந்தும் உரிமை எல்லோருக்கும் உண்டு. பொலிஸாரின் செயல் கண்டிக்கத்தக்கது என கண்டனத் தீர்மானம் சபையில் ஏற்றுக்கொள் ளப்பட்டது. (ம-159)

## மக்கள் சம்பள உயர்வைக் கோரி விரைவில் வீதியில் இறங்குவர்

*ஹர்ஷ டி சில்வா எம்.பி.தெரிவிப்பு*

கொழும்பு,ஒக்.13



பல பொருள்களுக்கு புதிய விலைகள் அறி விக்கப்பட்டுள்ள நிலை யில், மக்கள் சம்பள உயர்வைக் கோரி வீதி களில் இறங்கி போராட்டம் நடத்தும் காலம் மிகத் தொலை வில் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள் ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் கடமை என்ன? அமைச்சர்கள் தரகுக் கட் டணத்தை வாங்குவதன் மூலம் இத்தகைய விலை உயர்வால் ஆதாயம் அடைந்த பல நிகழ்வுகளை நாம் அறிந்திருக்கிறோம். சம்பளத்தை அதிகரிக்கக் கோரி மக்கள் வீதிகளில் இறங்க நீண்ட காலம் ஆகாது. பின்னர் அரசம் மக்களை அடக்குவதற்காக மீண்டும் அவசரச் சட்டத்தை விதிக்கும் - என்றார். (ஐ-இ)

# அனைத்துப் பொருள்களின் விலையும் எதிர்காலத்தில் மீண்டும் அதிகரிக்கும்

## முன்னாள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.13

அனைத்துப் பொருள்களின் விலையும் எதிர்காலத்தில் மீண்டும் அதிகரிக்கும் என்று முன்னாள் அமைச்சரான எம். எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்:

விலைகள் மிக அதிகமாக உயர்ந்துள்ளன. முன்னாள் அரசும் ஆட்சிக்கு வந்த பின் னர் அத்தியாவசிய பொருள்க ளின் விலையை முதலில் குறைத்தது.

அப்போதைய அரசும் அரசத் துறை சம்பளத்தை அதிகரித் தது மற்றும் பொதுமக்களுக்கு ஆதரவளிப்பதற்கும் சலுகை களை வழங்குவதற்கும் பணி யாற்றியது.

தற்போதைய அரசும் தேர்ந்தெ டுக்கப்பட்ட பின்னர் பெறுமதி சேர் வரிச் சலுகையை வழங்கி யது.



இது வர்த்தகர்களுக்கு மாத்தி ரமே பயனளிக்கிறது. பொது மக்களுக்கு அல்ல- என்றார். (ஐ-இ)




**இந்த அரசின்ர போக்கில கொஞ்சம் மாற்றம் தெரியுறமாதிரி கிடக்கு. அதுக்காக அவை திருந்திட்டினம் எண்டு சொல்லேல்ல. ஆனா தமிழரின்ர விசயத்தை அணுகிற தில வெளிநாட்டுக்காறருக்கு போக்குக் காட்டுறத்துக்காக எதிர்பாராத சிலதுகளைச் செய்யினம் எண்டு மட்டும் தெரியுது.**

**வடக்கின்ர பெரிய அம்மணி பதவியில இருந்து தூக்குப்பட்டது தெரிஞ்ச சங்கதிதான். அவவை தூக்குறதுக்கு வவுனியாவிலிருந்து பிரதான செயல்புரிய வந்தவரும் காரணம் எண்டு சொல் லப்படுகுது. சிஷ்யன் குருவை மிஞ்சின மாதிரிதான் இந்தச் சம்பவம் நடந்திருக்கு. வடக்கின்ர அம்மணி சகல விசயங்களிலையும் தலைப்போடுறவா. பிரதானமாய் செயல்புரியிற பதவியில முந்தி இருந்தவர், அதில கொஞ்சக் காலம் நீடிப்பு எடுத்து இருக்கிறதுக்காக அம் மணிக்கு சலாம் போட்டவர். அதுக்காக அம்மணி முயற்சித்ததும் வேறகதை. இந்த நன்றிக்கடனுக்காக தன்ர வரம்புக்கு உட்பட்ட விசயங்களையும் அம்மணி செய்விக்க அவர் விட்டுட்டு இருந்தவராம். ஆனா வவுனியாவிலிருந்து பிக்குகள் புடைசூழ புதுசா வந்தவருக்கு அது சரிப்பட்டு வரேல்ல. அம்மணி தன்ர விசயங்களுக்குள்ள கண்டபடி மூக்கு நுழைக்கிறா எண்டு மேலிடத்துக்கு முறைப்பாடாம். அதுவும் அவவை மாத்தி னத்துக்கு ஒரு காரணமாம். அவவை மாத்திட்டு புதுசாப் போடுற ஆளைப் பற்றியும் மேல் மட்டம் வலு கவனமாய் இருந்ததாம். வடக்கு ஆக்களோட முரண்டு பிடிக்கிற மாதி ரி எதுவும் செய்யக்கூடாது எண்டு உறுதி யாய் இருந்தவையாம். அதுக்கு ஏற்ற மாதிரித்தான் ஒராளைப் போட்டிருக்கினம். பார்ப்பம். அந்தாள் வந்ததுக்கு பிறகுதான் தெரியும் புலியா? பூனையா? எண்டு.**

**அந்தக் கதை அப்பிடிப் போக இன்னொரு கதையும் காத்துவாக்கில வருகுது. வடக்கின்ர பெரிய அம்மணிக்கு அடுத்ததாக புலிகேசியாருக்குத்தான் இடமாற்றம் எண்டு ஒரு கதை. இப்ப உடன இல் லையெண்டாலும் கெதியில நடக்கும் எண்ட மாதிரித்தான் சொல்லுப்படுது. அவர் கனவு பாழாய்ப்போனவரோடதான் வலு ஐக்கியம். அதுவும் மேல் மட்டத்துக்கு பிடிப்பில்லை. மக்கள் விரும்பிற மாதி ரியோ, அதிகாரிகள் வேலை செய்யக் கூடிய மாதிரியோ இவரின்ர நிர்வாகம் இல்லை எண்டதும் மேல் மட்டத்தின்ர அபிப்பிராயம். இதால புலிகேசியார் மாத்துப்படுறதும் உறுதி எண்டு தெரியுது. பாருங்கோவன் பட்சி சொன்னது நடக்குதோ? இல்லையோ? எண்டு...!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு நிலைக்குத் திரும்ப பல தசாப்தங்கள் ஆகலாம்

## *மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு*



**கொழும்பு, ஒக். 13**

**புதிய இயல்பு நிலைக்குத் திரும்புவதென்றால், அதற்கு பல தசாப்தங்கள் ஆகலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

2019ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த சாதாரண நிலைக்கு நாம் மீண்டும் திரும்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை என்னால் சரியாகச் சொல்ல முடியாது. சில வேளை அதற்குத் தசாப்தங்கள்கூட ஆகலாம்.

இந்த சூழ்நிலையில், நாம் அனைவரும் நமது சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பயணச் செயற்பாடுகளையும் முடிந்த வரையில் மட்டுப்படுத்தினால், நோயாளிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் முடியும்' - என்றார். (ம)

# 2022 மார்ச்சுக்குள் மாகாண சபைத் தேர்தல்

## *பழைய முறைமையிலேயே நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் விரைவில் சபைக்கு*

கொழும்பு, ஒக். 13

'2022 மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாகவுள்ளது. ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காகவே தேர்தல் நடத்தப்படுகின்றது. மாறாக வெளிநாட்டு அழுத்தத்தால் அல்ல' என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

'நாட்டில் நடைபெற்று வந்த மாகாணசபைத் தேர்தல் முறைமையை இல்லாது செய்து, கலப்பு முறைமையை 2017 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசு முன்வைத்தது. எனினும், எல்லை நிர்ணயப் பணி உரியவகையில் செய்யப்படவில்லை. இதனால் தேர்தல் இழுத்தடிக்கப்பட்டது.

எமது அரசானது மாகாணசபைத் தேர்தலை 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு எதிர்ப்பார்க்கின்றது. சட்டத் திருத்தம் செய்யாது எந்த முறைமையிலும் தேர்தலை நடத்த முடியாதென சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார். எமக்கு 2 தேர்வுகள் உள்ளன.

ஒன்று கலப்பு முறையை முன்வைத்து நிறைவேற்றிக்கொள்வது. ஆனால் அவசரமாக தேர்தலை நடத்த வேண்டியிருப்பதால், இம்முறை மட்டும் பழைய முறைமைக்கே அதாவது 2017க்கு முன்னர் இருந்த முறைமையிலேயே தேர்தலை நடத்துவதாகவும், அதன் பின்னர் மறுசீரமைப்பு



செய்வதாகவும் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இது தற்காலிக ஏற்பாடு மாத்திரமே. எனவே, இது தொடர்பில் கொள்கை அடிப்படையிலான தீர்மானமொன்றை எடுத்து, தேவையான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, விரைவில் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பு.

இலங்கை மக்களுக்காகவும், ஜனநாயகத்தை வலுப்படுத்தவுமே தேர்தலை நடத்துகின்றோம். மாறாக வெளிநாட்டு அழுத்தத்தால் அல்ல. இந்திய வெளிவிவகார அமைச்சர் அழுத்தம் கொடுத்தார் என வெளியாகும் தகவல் கற்பனையாகும்.' - என்றார். (ம-44)



# அரசின் தீர்மானமே தற்போதைய தேவை

## *அமைச்சர் ரோஹித தெரிவிப்பு*

அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசு அதிகரித்தமை சிறந்த தீர்மானம். தற்போதைய சூழலில் அது மக்களுக்குப் பொருத்தமானதே என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்களை வரிசைகளில் நிற்க வைப்பதா அல்லது பொருள்களின் விலைகளை ஓரளவுக்கு அதிகரித்தேனும் மக்களுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதா? என்பதில் அரசு தற்போது எடுத்துள்ள தீர்மானமே சரியானது.

ஆனால் எதிர்க்கட்சியினர் மக்கள் வரிசையில் நிற்பதை காண்பதற்கு அளவு கடந்த ஆசையில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# சாரணர் குழாமினால் குருதித்தான முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ் மாவட்ட திரிசாரணர் குழாமினால் குருதித்தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாமானது இன்று முத்தமிழ் வீதி கொட்டடியில் உள்ள மூவேந்தர் சர்வோதய சிரமதான சங்கத்தில் நடைபெறவுள்ளது. காலை 9 தொடக்கம் நண்பகல் 2 மணி வரை இந்தக் குருதித்தானம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி1)

# இரண்டு வெவ்வேறு இடங்களில் விபத்து

சாவகச்சேரி ஒக்.13

தென்மராட்சிப் பிரதேசத்தில், இரு வெவ்வேறு இடங்களில் வீதி விபத்துக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன. நாவற்குளி கோவிலாக்கண்டிப் பகுதியில் 75 வயது முதியவரும், மட்டுவில் வடக்குப் பகுதியில் 29, 27 வயது ஆகிய இருவரும் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி1,9)

# நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.13

நீதிமன்றங்களின் அழைப்பாணையையும் மீறி, வழக்குகளுக்கு சமுகமளிக்காத நால்வர், யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட படையணியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் வழக்குகளுக்கு சமுகமளிக்காதவர்களுக்கு நீதிமன்றங்கள் பகிரங்க பிடியாணை பிறப்பித்திருந்தன.

அதனடிப்படையில் சாவகச்சேரி நீதிமன்ற பிடியாணையின் பிரகாரம் ஒருவரும், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பிடியாணை உத்தரவுடன் இருவரும், யாழ்ப்பாணம் நீதிமன்ற பிடியாணை உத்தரவில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-125)

# வீதிப் புனரமைப்பால் மக்கள் அசௌகரியம்




யாழ்ப்பாணம், ஒக்.13

வீதிப்புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மானிப்பாய் ஊடான காரைநகர் வீதி 5 மாதங்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

இதன்போது மானிப்பாய் பிரதான வீதியின் மூன்றாம் கட்டைப்பாலம் சேதமடைந்துள்ளது. அதனால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

அத்துடன் 782,788, 787,786 ஆகிய வழித்தட பஸ்கள் கொக்குவில் குளப்பிட்டி சந்தியூடாக நீண்ட தூரப் பயணத்தை மேற்கொள்கின்றன. இதனால் குறுகிய தூரப் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் மானிப்பாய் கொமர்ஷல் வங்கி முன் பக்க பிரதான வீதியில் பெரிய குழி ஏற்பட்டுள்ளது. இதனால் மானிப்பாய் பிரதான வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் சேதமடைவதுடன், மக்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிக்கையில், சேதமடைந்துள்ள பாலம் மற்றும் வெள்ளம் தேங்கியுள்ள பெரும் குழி ஆகியவற்றை உடனடியாக புனரமைப்புச் செய்யுமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளோம். ஒப்பந்தகாரர்களே அதனை மேற்கொள்ள வேண்டும். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வீதிப் புனரமைப்பை விரைவுபடுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளோம் - என்றார். (ஒ-4,125)

# சிறுமி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.13

தந்தை இல்லாத தருணத்தில் வீடு புகுந்த குழுவினர் 16 வயதுடைய சிறுமி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் பொன்னாலை மேற்கில் பதிவாகியுள்ளது.

தந்தையாருடன் சிறுமி வசித்து வந்த நிலையில், அவர் வீட்டில் இல்லாத தருணத்தில், அங்கு புகுந்த குழுவினர், சிறுமி மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் சிறுமியின் பற்கள் உடைந்துள்ளன.

சிறுமி காரைநகர் வலந்தலை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் ஊழியருக்கு அறுபது வயதில் ஓய்வு




கொழும்பு,ஒக்.13
தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதைத் திருத்துவதற்கான சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தனியார் துறை ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது எல்லையை 60 ஆக அதிகரிப்பதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வூதிய வயது எல்லையை 60 ஆக அதிகரிக்க தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

55 வயதை நிறைவு செய்த ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயதை 57ஆகவும், 52 வயதுக்கு கீழ் உள்ள ஊழியர்களுக்கு 60 வயதாகவும் இந்த சட்டம் முன்மொழியப்படவுள்ளது.

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்த பட்ச ஓய்வூதிய வயது முன்பு 55 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# மின் உற்பத்திக்கு அதிக செலவு: கட்டணம் உயர்வதற்கு வாய்ப்பு

கொழும்பு,ஒக்.13

**உலக சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளதால், மின் உற்பத்திக்கான செலவு மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் வரும் காலத்தில் மின் கட்டணமும் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவிக்கையில், தற்போது ஒரு மெற்றிக் தொன் நிலக்கரியின் விலை 200 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 40 வீதம் நிலக்கரியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த ஆண்டுக்குத் தேவையான நிலக்கரி ஏற்கனவே, இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளமையால், அடுத்த ஆண்டு மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரிக்கக்கூடும். அதனடிப்படையில் ஓர் அலகு மின்சார உற்பத்திக்கான செலவு 4 ரூபாவால் அதிகரிக்கக்கூடும். தற்போது 45 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான மின் கட்டணப்பட்டியல்கள் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளன. கொரோனாத் தொற்றால் நுகர்வோர் அவற்றைச் செலுத்தத் தாமதித்துள்ளனர் - என்றார். (ஓ-4)

# மேய்ச்சல் தரவைக்கு ஒதுக்கப்பட்டது 352 ஏக்கர்

மன்னார்,ஒக்.13
மன்னாரில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைக்கு என கட்டுக்கரைப் பகுதியில் 352 ஏக்கர் நிலப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் இல்லாதால் கால்நடைகளின் பண்ணையாளர்கள் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக கால்நடைப் பண்ணையாளர்களுடன் பல தரப்பினரும் இணைந்து மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் தற்போது மன்னார் கட்டுக்கரைக் குளத்தை அண்மித்த புல்லறுத்தான் கண்டல் பகுதிகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக 352 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக ஒதுக்கப்பட்ட பகுதிகளில் எல்லைக் கற்கள் இடும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

## இலங்கையில்
# 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய்

கொழும்பு,ஒக்.13



இலங்கையில் 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் காணப்படுகின்றது என்று மார்பகப் புற்றுநோய் தொடர்பான சிறப்பு மருத்துவ நிபுணர் ஹசந்தி ஜயலத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பதிவாகும் புற்றுநோயாளர்களில் 27 சதவீதமானவர்கள் பெண்கள். இதில் நான்கில் ஒரு பகுதியினர் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் மார்பகங்களை அகற்றாமல், புற்றுநோய் கட்டிகளை மாத்திரம் அகற்றி அதனை நூறு வீதம் குணப்படுத்த முடியும். புற்றுநோய்க்கு அதிக உடற் பருமன், மது மற்றும் புகைப்பொருள் பாவனை உள்ளிட்டவை காரணங்களாக அமைகின்றன. எனினும் பரம்பரையின் காரணமாக சிலருக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படும் - என்றார். (ஐ-இ)



# கடையின் கூரை பிரித்து திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.13
கடையின் கூரை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சில பொருள்களைத் திருடியதுடன், 32 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை சித்தன்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உரிமையாளர் கடையைப் பூட்டி விட்டு சென்றதை அடுத்து, திருட்டு இடம்பெற்றுள்ளது. கிட் கார்டுக்கள்,சிகரெட்டுகள் மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த, வட்டுக்கோட்டைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஓ-4,125)

# இந்திய மீனவர்களுக்கு எதிராக முல்லைத்தீவிலும் போர்க்கொடி

முல்லைத்தீவு,ஒக்.13
இலங்கையில் வடக்குக் கடற்பரப்பில் தொடரும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களை இனியும் அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டத்திலும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் மோ.விக்னா அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்திய மீனவர் விவகாரத்துக்கு அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதால், யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எமது மாவட்டத்திலும் இந்திய மீனவர்களின் வருகையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கள்ளப்பாடு கிராமத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நான்கு மீனவர்களின் வலைகள் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளால் அழிக்கப்பட்டுள்ளன. இது அவர்களது குடும்ப வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ளது.

இவ்வாறான நிலை தொடருமானால், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுடன் கைகோர்த்து, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களும் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ஓ-4)

# இந்தியாவின் செயற்பாடுகளால் தமிழர்கள் சீனாவிடம் சாயும் நிலை

## இந்திய புலனாய்வு நிறுவனங்கள் கவலை

கொழும்பு, ஒக்.13
இலங்கையில் உள்ள தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற இந்தியா தவறியதை அடுத்து, புலம்பெயர் தமிழர்களில் சிலர் சீன உதவியை நாட முயற்சிக்கின்றனர் என்று இந்தியப் புலனாய்வுத் துறை கவலை வெளியிட்டுள்ளதென "ஹிந்து" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் இந்தியா தீவிர முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை என்று லண்டனில் அண்மையில் நடைபெற்ற மாநாடொன்றில் புலம்பெயர் தமிழர்கள் கூறியிருந்தனர் என்று இந்திய புலனாய்வு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய அரசின் செயலற்ற தன்மையே சீனா இலங்கையில் முக்கியத்துவம் பெறக் காரணமாக அமைந்தது. இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் மற்றும் பொருளாதாரத் தளத்தை உருவாக்குவதற்கு சீன அரசுடன் பேச்சு நடத்துவதற்கு லண்டனில் நடந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இந்திய புலனாய்வு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரிப் பிரதேச சபையில் அங்கஜனுக்கு எதிராகக் கண்டனம்

கொடிகாமம், ஒக்.13

**நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான கிராம மட்டக் கூட்டங்கள், நிகழ்வுகளில் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் அவமதிக்கப்படுகின்றனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே சபையின் உபதவிசாளர் செ.மயூரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிராம மட்ட அபிவிருத்திகளை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அவற்றின் ஒழுங்குபடுத்தல்களில் சில தவறுகள் இருக்கின்றன.

சில இடங்களில் பிரதேச மக்கள் பிரதிநிதிகளை அழைக்கின்றார்கள், சில இடங்களில் அவ்வாறு அழைப்பதில்லை. சில இடங்களுக்குச் சென்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் அவமதிக்கப்பட்டுள்ளனர். பல கூட்டங்களில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களை இழிவாகக் கதைத்தது மட்டுமல்லாது, பிரதேச சபையைக் குறைவாக மதிப்பிட்டுப் பல இடங்களில் அநாகரிகமான முறையில் கதைத்த சம்பவங்களும் நடந்துள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை அவமதிப்பது கண்டிக்கத்த விடயம். அதனால் இந்தச் சபை அமர்வில் கண்டனம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

சபையில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினரைத் தவிர, ஏனையோர் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டனர். அதையடுத்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-159)

## பஸ் கட்டணம் அதிகரிக்காது?

பஸ் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்தவித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்துக் கட்டணத்திலும் உயர்வு ஏற்படுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர், அவ்வாறானதொரு முடிவை இன்னும் எடுக்கவில்லை. எனினும் போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. -என்றார். (ஒ-4)



## வெள்ளைப்பூண்டு மோசடி: சதொசவில் நால்வர் கைது

கொழும்பு, ஒக்.13

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில், சதொசவைச் சேர்ந்த அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சதொசவின் கொள்வனவு தொடர்பான உதவி மேலாளர், சிரேஷ்ட விநியோக முகாமையாளர், விநியோக முகாமையாளர் மற்றும் வெலிசர மொத்த விற்பனை முகாமையாளர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-4)

## 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

இளவாலை, ஒக்.13

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பண்டத்தரிப்பு அம்மன் வீதியில் வைத்து நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு படையணிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதன் போது 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டதுடன், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-125)

**கொழும்பு - யாழ்.**

## உள்நாட்டு விமான சேவை மீண்டும் நவம்பரில் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.13

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கு இடையிலான உள்நாட்டு விமான சேவை நவம்பர் மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்ட விமான சேவையை சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மீண்டும் ஆரம்பிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விமான நிலைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம், நாடு மூடப்படுவதற்கு முன்பு, இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்துக்கு வாரத்துக்கு இரண்டு முறை விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

## பொம்மையாகியது அரசு ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.13

பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாத அரசு, நிறுவனங்களின் கட்டுப்பாடுகளுக்கு தலையாட்டும் சோளக்காட்டுப் பொம்மை போன்று மாறிவிட்டது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பால்மா, சிமெந்து, சமையல் எரிவாயுவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டமைக்கு டொலர் தொடர்பான பிரச்சினை காரணமல்ல. அவ்வாறெனில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையில் உள்ள எவருக்கும் அரிசியின் விலையைத் தீர்மானிக்க முடியாமல் போனது. எனவே நெல்லின் விலையையும், அரிசியின் விலையையும் தீர்மானிப்பது அரிசி ஆலை உரிமையாளர்கள் போல், பால்மா, கோதுமை மா என்பவற்றின் விலையையும் அந்தந்த நிறுவனங்களே தீர்மானிக்கின்றன.

இன்று அரசோ, நிர்வாகமோ நாட்டில் இல்லை. இந்த விடயத்தில் அரசு தமது பொறுப்பிலிருந்து விலகியுள்ளது. பொருள்களின் விலையை நிறுவனங்கள் தீர்மானிக்குமாயின் ஜனாதிபதியோ, அமைச்சரவையோ நாட்டில் எதற்கு?.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று ஜனாதிபதி அடிக்கொரு தடவை கூறினாலும், அவ்வாறானதொன்று இந்த மண்ணில் இல்லை. இன்று ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் கட்டுப்பாடு இன்றியே அனைத்தும் நடப்பது மக்களுக்குத் தெரிந்து விட்டது. -என்றார். (ஒ-4)

# சதுரங்க வேட்டைப் பாணியில் இடிதாங்கி விற்ற பலே கும்பல்

### கூண்டோடு அள்ளியது நுவரெலியா பொலிஸ்

இடிதாங்கியை சுமார் 100 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்து தருவோம் என்று கூறி ஒருவரிடம் பல லட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் 9 பேர் நுவரெலியா மாவட்ட குற்ற விசாரணைப் பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் அதிகாரி ஒருவரும், போலி மருத்துவர், போலி சட்டத்தரணி ஆகியோரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இடிதாங்கி ஒன்றை வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றால் பல கோடி ரூபா கிடைக்கும் என்றும், இடிதாங்கியைக் கொள்வனவு செய்ய பணம் தேவை என்றும் தெரிவித்தே இந்த மோசடி நடந்துள்ளது.

இடிதாங்கியைக் கொள்வனவு செய்யப் பணம் தருபவருக்கு, இடிதாங்கியை விற்ற பின்னர் 100 கோடி ரூபா தர முடியும் என்று இந்தக் கும்பல் ஆசை காட்டியுள்ளது. இவ்வாறு கூறி ஒருவரிடம் இருந்து 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டுள்ளது இந்தக் கும்பல். இந்தக் கும்பலில் சட்டத்தரணியாக நடித்த ஒருவர், போலி சட்டத்தரணி முத்திரை ஒன்றைப் பயன்படுத்தி பணம் செலுத்தும் நபர்களுடன் போலி ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்துள்ளார். நுவரெலியாவில் உள்ள விடுதி ஒன்றில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வும் நடந்திருக்கின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு கோடியே 33 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இவர்கள் பயன்படுத்திய இரு வான்கள், ஒரு கார் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேகநபர்களை நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சில காலத்துக்கு முன்னர் "சதுரங்க வேட்டை" என்னும் தென்னிந்தியத் திரைப்படம் வெளியாகியிருந்தது. இடிதாங்கி, கோயில் கலசம் விற்பனை என எவ்வாறு இந்த மோசடிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைக் கூறும் அந்தத் திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வாழ்வதே சாதனையப்பா!


ஒரு அமெரிக்கரும் இலங்கையரும் நல்ல நண்பர்கள். நீண்டகாலத்தின் பின்னர் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டனர். இலங்கையர் அமெரிக்கரிடம், 'உங்கள் வாழ்வில் நீங்கள் செய்த சாதனை என்ன?' என்று வினவினார். அதற்கு அமெரிக்கர் தன்னுடையதும் தங்கள் நாட்டினதும் சாதனைப் பட்டியலை எடுத்துவிட்டார். சந்திரனில் கால் வைத்தது முதல் ஒஸாமா பின்லேடனைக் கொன்றது வரை அந்தச் சாதனைப் பட்டியல் நீண்டது. அமெரிக்கர் அல்லவா, எனவே அப்படிப் பட்டியலிடுவதில் வியப்பில்லை. எல்லாவற்றையும் மூச்சிரைக்கச் சொல்லிவிட்டு அமெரிக்கர் இலங்கையரைப் பார்த்து, 'அதுசரி உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்த சாதனை என்ன?' என்று கேட்டார். இலங்கையர் அமெரிக்கரைப் போன்று விலாவாரியாக 'விலாசம்' காட்டவில்லை. ஒற்றை வரியில், 'நான் எங்கள் நாட்டில் வாழ்வதே ஒரு சாதனைதான்' என்றுவிட்டுக் கடந்து சென்றாராம். இதே எண்ணவோட்டத்தில்தான் இன்று ஒவ்வொரு இலங்கையரும் உள்ளனர். நாங்கள் வாழ்வதே சாதனைதான் என்பதாகவே நகர்ந்துகொண்டிருக்கின்றது நாட்டுநிலைமை.

வெளிநாட்டு இறக்குமதிகளிலும் ஆடம்பரப் பொருள்களிலும் ஆரம்பித்த விலையுயர்வு, இன்று அன்றாடப் பொருள்களிலும், அடிப்படைத் தேவைகளிலும் வந்துநிற்கின்றது. தூங்கி எழுந்தால் ஏதோவொரு பொருளின் விலை உயர்த்தப்படுகின்றது எனும் செய்திதான் காதில் விழுகின்றது. எரிவாயு, பால்மா, கோதுமை மா, பேக்கரிப் பொருள்கள், சிற்றுண்டிகள் என்பனவற்றுக்கு விலை அதிகரிக்கப்பட்டு சராசரி மனிதனின் வாழ்வில் இந்த விலையேற்றங்கள் இடியாய் -இறங்கியுள்ளன. இதுபோக, ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலைகளை மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவே கருதப்படுகின்றது. கூடிய விரைவில் அது நடக்கப்போவதை துறைசார் அதிகாரிகளின் கருத்துக்கள் கட்டியம் செய்கின்றன. மின்கட்டணத்தையும் கூட்டுவதற்கான சமிக்ஞைகள் பலமாகத் தெரிகின்றன.

இத்தனைக்கும் இலங்கையரின் தனிநபர் வருவாயில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றனவா? என்பதையும் இங்கே சிந்தித்துப் பார்க்கவேண்டும். கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஒவ்வொரு தனிமனிதனுடைய பொருளாதார நிலையும் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானதைப் போன்று சிறுத்துச் சிதைந்துவிட்டது. கொரோனாவால் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஒவ்வொரு வீட்டிலும் ஏற்பட்டுள்ளது. தனது வருமானத்தை உறுதிப்படுத்த - நிலைப்படுத்த - தக்கவைக்க இருக்கக்கூடிய அத்தனை வழிகளையும் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் சிந்தித்துக் கொண்டிருக்கையில் குருவியின் தலையில் பனங்காயாக அமைந்துள்ளது அரசின் செயற்பாடு.

தேசிய வருமானத்தில் வீழ்ச்சி என்பதை மறுப்பதற்கில்லை. பொருளாதாரத்தை நிலைப்படுத்த அரசும் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதிலும் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், அரசின் பின்னடைவை அப்படியே பொதுமக்களின் தலைகளில் கட்டிவிடுவதென்றால் நிர்வாகம் என்ற ஒன்று எதற்கு? நல்லதொரு நிர்வாகத்துக்கு அழகே ஆகச்சிறந்த முகாமைத்துவம்தானே. அது இந்த அரசிடம் இம்மியும் இல்லை என்பதுதான் உண்மை.

"உரிய பொறிமுறைகளை விரைந்து ஏற்படுத்துங்கள், பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான அத்தனை வழிகளையும் தேர்ந்தெடுங்கள், சர்வதேசத்துடனான உறவைப் பலப்படுத்துங்கள், மக்களின் தலைகளில் சுமைகளை ஏற்றாதீர்கள். அவர்கள் ஏற்கனவே போதும்போதும் என்கின்ற அளவுக்கு வதைக்கப்பட்டுள்ளனர். விலையேற்றத்தையும் பொருளாதாரப் பின்னடைவையும் பரிசாகத் தருவதற்காக மக்கள் உங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. வாழ்வதே சாதனைதான் என்ற நிலையில் இருந்து வாழ்வதே வீண் என்ற நிலைக்கு மக்களைக் கொண்டுசென்று விடாதீர்கள்" என்று இந்த ஆட்சியாளர்களிடம் எல்லா மக்களையும் இன, மத பேதமின்றிப் புலம்ப வைத்ததும் ஒரு சாதனைதானே.



# அனுபவம் இல்லை என்றால் அதிகாரத்துக்கு ஏன் வந்தீர்?

### கோத்தாவை சாடிய விவசாயிகள்



**கொழும்பு, ஒக்.13**

**உரத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்று வலியுறுத்தி கறுவாப் பட்டை விவசாயிகளால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

அஹுங்கல்ல, கடுவில, மருதானை, பதிராஜ பிரதேசம், பத்திராஜகம, மஹம்மா கேஹெனவத்த, பொரலு கெட்டிய மற்றும் பொத்ஹது பகுதி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கறுவாப் பட்டை விவசாயிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், அரசுக்கும் எதிராகக் கோசங்களை எழுப்பியதுடன், விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

உரம் இல்லாததால் கறுவாப்பட்டை விளைச்சல் குறைந்து அழிந்துள்ளது என்று தெரிவித்த விவசாயிகள், உரப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வொன்றைப் பெற்றுத் தர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

நெல் மற்றும் காய்கறி விவசாயிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

"அப்பாவுக்கு வேலை செய்ய முடியாது என்பதை அறிந்து மகன் அவரை அமெரிக்காவுக்கு அழைக்கிறார்", "வேலை செய்ய முடியாத அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும்", "இரண்டு வருடங்களுக்குப் பின்னர்தான் வேலை செய்ய முடியாது என்பதை அறிந்து கொண்டீர்களா?", "அனுபவம் இல்லை என்றால் அரசாங்கத்தை ஏன் பொறுப்பேற்க வேண்டும்?", "பசிலா ஜனாதிபதி, கோத்தாவா ஜனாதிபதி?, மஹிந்த நாமலுக்கு வழி வகுக்கின்றார்" என்பன போன்ற கோசங்கள் விவசாயிகளால் எழுப்பப்பட்டன. (எ-இ)

# கடும் சூறாவளியிலும் கப்பலை செலுத்துகின்றாராம் ஜனாதிபதி

### தோல்வி என்பதை ஏற்கமுடியாது என்கிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, ஒக். 13

'கொரோனா பெருந்தொற்றால் முழு உலகமுமே பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் சரிவடைந்துள்ளது. அப்படி இருந்தும் நாட்டை எமது ஜனாதிபதி சிறப்பாக வழிநடத்துகின்றார். கடும் சூறாவளிக்கு மத்தியிலும் கப்பலை கவிழ விடாமல், பயணிக்கும் கௌரவம் ஜனாதிபதியையே சென்றடையவேண்டும்' என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்:

'இலங்கை வரலாற்றிலேயே மிகவும் மோசமான முகாமைத்துவம் நல்லாட்சியிலேயே முன்னெடுக்கப்பட்டது. இதனால் சகல துறைகளிலும் நாடு நாசமாக்கப்பட்டது. இவ்வாறு சீரழிக்கப்பட்ட நாடே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஆட்சியின்போது நாடு எவ்வாறு சீரழிக்கப்பட்டது என்பதை புள்ளி விவரரீதியாக நிரூபித்துள்ளேன். இது தவறெனில், இல்லை என நிரூபிக்குமாறு எதிரணியினருக்கு சவால் விடுக்கின்றேன்.

அதேவேளை, கொரோனா பெருந்தொற்றால் உலகமே பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் செத்துமடிகின்றனர். நாட்டின் பொருளாதாரம்கூட கடுமையாக சரிந்தது. நெருக்கடியான சூழ்நிலையிலும் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் நாம் 4ஆவது இடத்தில் இருக்கின்றோம். கடும் சூறாவளியிலும் கப்பலை கவிழ விடாமல், முறையாகச் செலுத்தும் கௌரவம் ஜனாதிபதியையே சென்றடையவேண்டும்.' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய அதிபரின்

# மணிவிழா வாழ்த்து

## காசித்தம்பி கந்தசாமி S.L.P.S - I



| | |
|---|---|
| பிறப்பிடம் | : கச்சாய் தெற்கு, கொடிகாமம் |
| பிறந்த திகதி | : 13.10.1961 |
| ஆரம்பக்கல்வி | : யா/ அல்லாரை அ.த.க.பாடசாலை |
| இடைநிலை. உயர்கல்வி | : யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| தொழில் தகைமை | : பயிற்றப்பட்ட வர்த்தகம் |
| முதல் ஆசிரியர் நியமனம் | : யா/ வரணி மகா வித்.21.03.1990 வர்த்தக பாட ஆசிரியர் |
| ஆசிரியர் கடமை | : 12 வருடம் 3 மாதம், |
| அதிபர் கடமை | : 19 வருடம் 3 மாதம் 19.07.2002 - 12.10.2021 |

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| 01. யா/ வரணி ம.வி | - 21.03.1990 - 29.04.1996 | - ஆசிரியராக |
| 02. மு/ யோகபுரம் ம.வி. | - 30.04.1996 - 14.06.1998 | - ஆசிரியராக, உப அதிபராக |
| 03. யா/ வரணி ம.வி | - 15.06.1998 -28.06.1998 | - ஆசிரியராக |
| 04. யா/ கச்சாய் அ.த.க பா | - 29.06.1998 – 18.07.2002 | - ஆசிரியராக |
| 05. யா/ சரசாலை சரஸ்வதி வித். | - 19.07.2002 – 14.08.2002 | - பதிலதிபர் |
| 06. யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித் | - 15.08.2002 - 04.02.2003 - | பதலதிபர் |
| 07. யா/ இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை | - 05.02.2003 - 02.08.2012 - | பதிலதிபர் |
| 08. யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் | - 03.08.2012 - 12.10.2021 | - அதிபர் - SLPS -I |

### ஆசியுரை



*"கற்க கசடு அறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக."*

என்னும் பொது மறையாம் திருக்குறள் வாக்குக்கு அமைவாக கச்சாய் தெற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகக் கொண்ட காசித்தம்பி கந்தசாமி அவர்கள் தம் ஆரம்பக் கல்வியை யா/ அல்லாரை அ.த.க. பாடசாலையில் கற்று உயர்நிலைக் கல்வியை யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கற்று அதற்கு அமைவாக ஆசிரியத் தொழிலே சிறந்ததெனக் கருதி 21.03.1990 ஆம் ஆண்டு வரணி மகாவித்தியாலயத்தில் வர்த்தக பாட ஆசிரியராக 12 ஆண்டுகள் கடமையாற்றி அதன்பின் 19 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி அதிலும் பொற்காலமாக அவர் இடைநிலை உயர்நிலைக் கல்வி கற்ற யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் 'ஆண்டு ஐந்து' பல மாணவர்களை தேர்வில் வெற்றி பெறச் செய்த தகைமைசார் செயல் வீரனுமாவார். அயல் கிராமத்தவர்கள் கூட வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் தங்கள் பிள்ளைகளை சேர்ப்பதற்கு அரும்பாடுபடுவதும் யாம் அறிந்ததே. அயராது விடா முயற்சியால் தனக்கென முத்திரை பதித்த அதிபருமாவார்.

*"உவப்ப தலைக்கூடி உள்ளப் பிரிவில்*
*அனைத்தே புலவர் தொழில்:*

இவ்வள்ளுவர் கூற்றாவது பலரும் மகிழுமாறு அவர்களுடன் கூடிப்பழகி பின்னர் இவரை இனி எப்போது காண்போமோ என்று எண்ணி ஏங்குமாறு அவர்களே விட்டுப் பிரிதலே கற்றறிந்த புலவர் தொழிலாகும்.

வள்ளுவரின் அக் கூற்றிற்கு அமைவாக பல ஆசிரியர்கள் பெற்றோர்கள் மனதில் இடம்பிடித்து அவர்கள் இவரை விட்டுப்பிரிய முடியாதவர்களாக இருக்கின்ற வேளையில் அரச தொழிலாவது அதற்குரிய அகவை வந்தால் பிரிய வேண்டியதுமாகும்.

இவ்வேளையில் பிரியா விடை பெறும் அதிபர் அவர்கள் நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் வாழ்ந்து தம்மாலான சமூகசேவை, கல்விச்சேவையை வழங்க எல்லாம் வல்ல சுட்டிபுரம் பதியுறை அம்பிகை நல்லருள் பாலிக்க வேண்டி பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

**சிவ அன்பன்**
**சிவஸ்ரீ இ. குமாரசுவாமிகுருக்கள்**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருவாளர் கா.கந்தசாமி அவர்களது அகவை அறுபதின் நிறைவை யொட்டி மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தில் 1961 இல் திருவாளர் காசித்தம்பிக்கு மகனாகப் பிறந்த கந்தசாமி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யா/அல்லாரை அ.த.க பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியினை யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலத்திலும் பெற்றுக் கொண்டவர். பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியராக முதல் நியமனமாக யா/வரணி மகா வித்தியாலயத்தில் பன்னிரண்டு வருடங்கள் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி நல்லாசிரியராக கடமையாற்றி பல சிறந்த மாணவர்களை உருவாக்கியவர்.

2002 ஆம் ஆண்டில் அதிபராக நியமனம் பெற்று ஒன்பது வருடங்கள் யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றி, சிறப்பான சேவையை கல்விப் புலத்திற்கு வழங்கியுள்ளார். சிறப்பான சேவையாளராக விளங்கியதோடு மட்டுமல்லாது, சிறந்த சமூக சேவையாளராகவும் அறியப்படுகின்றார். இவர் அதிபராகப் பணியாற்றிய காலகட்டத்தில் இப்பாடசாலை சிறந்த அடைவு மட்டத்தினைப் பெற்றுக் கொண்டமை பாராட்டத்தக்க விடயமாகும்.

*"உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்று அது*
*தள்ளினும் தள்ளாமை நீர்த்து"*

என்ற தெய்வப்புலவரின் சிந்தனைக்கமைய எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும் என்பதன் பொருளாய் அமைந்த சிறந்த கல்வியியலாளருக்கு மணிவிழா எடுப்பது சாலப் பொருத்தமானது. இதனைச் செயற்படுத்தி மகிழும் மணிவிழாச் சபையினரையும் பாராட்டி, அவரது ஓய்வுக் காலம் சிறக்க, சிறந்த தேகாரோக்கியத்துடன் கல்விப் புலத்திற்கு மேலும் பல சேவைகளை வழங்க எல்லாம் வல்ல இறைபரம் பொருளின் திருப்பாதங்களை பணிந்து மணிவிழா நாயகனுக்கு என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்.**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

### மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய தலைமகனை வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இருந்து ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் புதிதாக உதயம் பெற்ற யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக 03.08.2012 ஆம் திகதி பொறுபேற்று ஒன்பது வருடத்தினுள் பாட-சாலையினை தென்மராட்சியில் முன்னணி பாடசாலையொன்றாக வளர்த்த பெருமை காசித்தம்பி கந்தசாமி அவர்களையே சாரும்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தினை பிறப்பிடமாக கொண்ட அதிபர் அவர்கள் யா/வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராக விளங்குவதுடன் பாடசாலையின் வளர்ச்சியில் முன்னின்று செயற்பட்டார். பாடசாலையின் வளர்ச்சிக்காக கல்வித்திணைக்களம், மாவட்ட, மற்றும் பிரதேச செயலகம், பழைய மாணவர்கள், பெற்றோரினை ஒருங்கிணைத்து பாடசாலையின் பௌதீக கட்டமைப்பு தேவையினை நிறைவு செய்வதற்கு அரும்பாடுபட்டார்.

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன் கண்விடல்" (குறள் 517)*

என்ற திருக்குறளுக்கமைய பொருத்தமான ஆசிரிய வளத்தினை பொருத்தமான பிரிவிற்குள் அமர்த்தி மாணவர்களின் பெறுபேற்றினை உச்சமட்டத்திற்கு கொண்டு சென்று பாடசாலையின் புகழ் ஓங்குவதற்கு காரணமாக விளங்கினார். 2013ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் 9 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்தனர். 2019ம் ஆண்டு 36 மாணவர்கள் சித்தியடையுமளவிற்கு அதிபர் அவர்களின் திட்டமிடலே காரணமாக அமைந்தமை சிறப்பம்சமாகும். மேலும் தரம் 5 புலமைப் பரீட்சையில் 100புள்ளிகளுக்கு மேல் பெறுபவரின் எண்ணிக்கையில் (2017ம் ஆண்டைத் தவிர 65) 75% மேல் பெற்றிருக்கின்றமை சிறப்பம்சமாகும்.

இவ்வாறாக மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையினை புதிதாக ஆரம்பித்து ஒன்பது வருடத்திற்குள் இமாலய வளர்ச்சிற்குள் இட்டுச்சென்ற கா.கந்தசாமி அதிபர் அவர்கள் 12.10.2021 அன்று ஓய்வு பெறுகிறார். எனவே அவரினை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சார்பாக வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய அதிபர் அவர்களினை தனது குடும்பத்துடன் நல்லாரோக்கியம், நீண்டாயுள், நிறைசெல்வம், பெரும்புகழ், மெஞ்ஞானம் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**க.கனகேஸ்வரன்,**
**உப தலைவர், பழைய மாணவர் சங்கம்,**
**வீரசிங்கம் மத்திய கல்லூரி,**
**மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.**

### தென்மராட்சிப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்று கடந்த ஒன்பது வருடங்களாக கடமை யாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. கா. கந்தசாமி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இவ் அதிபர் தனது சேவைக்காலத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களின் அடைவுமட்டத்தினை உயர்த்தியுள்ளதுடன் பாடசாலையின் பௌதீக வளக் கட்டமைப்புக்களான காணி, கட்டடம், ஆரம்ப வாயில் வளைவு, திறன் வகுப்பறைகளையும் உருவாக்கி தென்மராட்சியின் அதிசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலையை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இன்று தென்மராட்சியின் நிலை நிறுத்திய அதிபர் திரு.கா.கந்தசாமி அவர்களின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், தென்மராட்சி/ சாவகச்சேரி.**

### மணி விழா வாழ்த்துக்கள்



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. காசித்தம்பி கந்தசாமி அவர்களை வாழ்த்துவதில் உவகையடைகிறேன். 1990.03.21 ஆம் திகதி யா/வரணி மகா வித்தியாலயத்தின் வர்த்தகப் பாட ஆசிரியராக தனது அரச சேவையினை தொடங்கி 12 ஆண்டுகள் ஆசிரிய பணியினை சிறப்பாக மேற்கொண்டுள்ளதுடன் 2002.07.19 ஆம் திகதி அதிபர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

2012 .08.03 ஆம் திகதி முதல் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் தனது அதிபர் பணியினை தொடங்கி இன்றுவரை பாடசாலை செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு மாணவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளார். பாடசாலை நிர்வாக செயற்பாடுகளுக்கு மேலதிகமாக சமூக சேவைகளிலும் ஆர்வமாக செயற்பட்டு சமூக மேம்பாட்டிற்காகவும் உழைத்துள்ளார்.

அந்த வகையில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் தனது ஓய்வுக் காலத்தினை சகல சிறப்புக்களுடனும் மகிழ்ச்சியாக கழிப்பதற்கு இறைவனின் அருளாசிகள் கிடைப்பதற்காக பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,வடக்கு மாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் ஒன்பது வருடங்கள் சிறப்பாக அதிபர் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் திரு.கா.கந்தசாமி அவர்களது சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் 12 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளதோடு 19 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றிய இவர் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு அதிபர் சேவையில் பதவியுயர்வுகளைப் பெற்று அதிபர் சேவை தரம் I இல் ஓய்வு பெறுகின்றார். இவர் இப்பாடசாலையில் கடமையாற்றிய காலத்தில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 85% இற்கு மேற்பட்ட மாணவர்கள் 70 புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

தென்மராட்சி வலயத்தில் சிறந்த ஒரு ஆரம்பப் பாடசாலையாக இப்பாடசாலையினை மிளிரச் செய்ததோடு கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இப்பாடசாலை மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிக்காட்ட வழிவகுத்துள்ளார். இவரது சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலை சிறந்ததொரு ஆரம்ப பாடசாலையாக உருவாகியுள்ளது.

31 வருடங்களிற்கு மேலாக கல்விக்கென அரும்பணியாற்றி ஓய்வு பெறும் திரு.கா.கந்தசாமி அவர்களது ஓய்வுகாலம் சிறக்கவும் வாழ்த்துவதோடு அவர் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய அரும்பணிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கி-ன்றேன்.

**செ.உதயகுமார்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

### மணிவிழா நாயகனிற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



எமது வலயத்தினைச் சேர்ந்த யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை அதிபர் திரு.காசித்தம்பி கந்தசாமி அவர்களின் மணிவிழாவிற்கு ஆசியுரை வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

இவர் தென்மராட்சிப் பதியிலே பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தான் பயின்ற பாடசாலையிலேயே அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெறும் பாக்கியம் பெற்றவர். யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை தனிப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதுடன் முதலாவது அதிபராகக் கடமையேற்று அயராது பாடுபட்டு உழைத்தவர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்களை சித்தியெய்த வைத்ததுடன் சிறந்த பெறுபேற்றினை அனைத்து மாணவர்களையும் பெறவைத்து தென்மராட்சி வலயத்தில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலேயே இப் பாடசாலைக்கு தனிப் பெருமை சேர்த்தவர். 12 வருடங்கள் ஆசிரியராகவும் 19 வருடங்கள் அதிபராகவும் கல்வித் துறைக்கு இவர் ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும், இவரது வழிகாட்டலில் கற்பித்த ஆசிரியர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர்.

பழகுவதற்கு இனியவராகவும் பார்வைக்கு எளிமையானவராகவும் பண்பட்ட உள்ளத்தினராகவும் விளங்குகின்ற இவரின் மணிவிழா நாளில் தனது குடும்பத்தினருடனும் உற்றார் உறவினர்களுடனும் சமூகத்துடனும் இன்புற்று வாழ்கவென வாழ்த்துகின்றேன். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணியைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

*கல்விப் பணியே கண்ணெனக் கொண்டு*
*கருத்துடன் நாளும் கடமைகள் புரிந்த*
*கந்தசாமி எனும் பெயரினைப் பெற்றோன்*
*காசினி தன்னில் காவியம் படைக்க*
[illegible]
*மணிவிழா நாளில் மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.*

**த.கிருபாகரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்விப் பணிமனை-தென்மராட்சி.**

### வாழ்த்துச் செய்தி



கல்விச் சமூகத்திற்கு அரும் பணியாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் திரு.காசித்தம்பி கந்தசாமி அவர்கள் இதுவரை காலமும் கல்விச் சமூகத்திற்கு வழங்கிய சேவையினைப் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சிறந்த ஆளுமையையும் தலைமைத்துவத்தையும் தன்னகத்தே கொண்ட இவர் 2012ம் ஆண்டில் யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் அதிபராகக் கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு பாடசாலையின் சிறந்த பெறுபேறுகளுக்கு வித்திட்டார். தென்மராட்சிக் கல்வி வலயத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலையைக் கொண்டு வருவதற்கு அயராது உழைத்துள்ளார். ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களுடன் சிறந்த தொடர்பாடலைப் பேணி வந்துள்ளார். கல்விப் பணியுடன் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு சமூகத்திற்கு அரும்பணியாற்றியுள்ள இவர் ஓய்வு காலத்தில் மேலும் சமூக, சமய நற்பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீடூழி வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி.சி.சிவநாதன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**

### கருமமே கண்ணாயிருந்த சேவையாளர்



அறுபதாவது அகவையில் அரசபணியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.கா.கந்தசாமி அவர்களுக்கான சேவை நலன் பாராட்டினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் முதலாவது அதிபராகக் கடமையாற்றியதுடன் இப் பாடசாலையினை தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவின் முன்னணி பாடசாலையாகவும் வருடாவருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்வான புள்ளிகளைப் பெறும் மாணவர்களை உருவாக்கும் சக்தியாகவும் திகழ்ந்தவர். அரச பரீட்சைக்கடமைகளில் சிறப்பாகச் செயற்பட்டிருப்பதுடன் பாடசாலையின் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதிலும் வல்லவராகக் காணப்பட்டவர். சக அதிபர்கள் பணியாளர்களுடன் சிறந்த தொடர்பாடலைக் கொண்டிருந்ததுடன் ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் சிநேகமான முகாமைத்துவத்தை கையாள்வதிலும் சிறந்த ஆளுமை மிக்கவராகத் திகழ்ந்தவர். இவர் அரச சேவையில் 31 வருடங்களாக சேவையாற்றியதுடன் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கும் தனது சேவையால் பெருமை சேர்ந்தவர். இன்றுடன் அரசபணியில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமோடு வாழ உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு. மு. ஜெகதாசன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி)**
**வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.**

### மணிவிழா வாழ்த்து



தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கிகொண்டிருக்கின்ற புகழ் பூத்த ஆரம்பக்கல்வி பாடசாலைகளில் ஒன்றான வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் அதிபர் திரு.கா.கந்தசாமி அவர்கள் 12.10.2021 அன்று ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு வாழ்த்து செய்தி வழங்குவ-தில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

2012 ஆம் ஆண்டு வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இருந்து அரச கொள்கைக்கு அமைவாக பிரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் மூலகர்த்தவாக திகழ்ந்து இன்றுவரை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் புகழ்பூத்து திகழ வைத்த அதிபர் அவர்கள் மேலும் ஓய்வுகாலம் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**சோ.திருக்குமரன்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர்,**
**(ஆரம்பக்கல்வி)**
**தென்மராட்சி கல்வி வலயம்**

### உழைப்பால் உயர்ந்தவர்



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபது கண்டு காலத்தின் கட்டளையின் பேரில் ஓய்வு பெறும் நண்பர் திரு.காசித்தம்பி கந்தசாமி அவர்களின் பணியினை நயந்து பாராட்டுவதில் மனம் மகிழ்வடைகின்றேன்.

வரணி மத்திய கல்லூரியில் நான் ஆசிரியராகப் பணியாற்றிய போது தனது முதல் ஆசிரியப் பணியினை அங்கே ஆரம்பித்து கடமையாற்றிய அனைத்துப் பாடசாலைகளிலும் அர்ப்பணிப்பான சேவையினால் பாடசாலை சமூகத்தின் மனங்களை வென்றவர். யா/இயற்றாலை அமெரிக்கன் மிசன் பாடசாலையின் அதிபராக கடமையேற்று பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன் அங்கு தன்னிறைவான வளர்ச்சியை ஏற்படுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியிலும் சமூக மட்டத்திலும் நன்மதிப்பை பெற்றவர். தொடர்ச்சியாக யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இருந்து தனியாக ஆரம்ப வித்தியாலயமாக ஆரம்பித்த போது முதலாவது அதிபராக கடமையேற்று தாய்ப்பாடசாலையுடன் ஒன்றிணைந்து ஒரு தாய் பிள்ளைகள் போல தனது அதிபர் கடமையினை முன்னெடுத்து மாணவர்களின் அடைவு மேம்பாட்டினை கோடிட்டுக் காட்டிய பெருமகன். புதியதோர் இடத்திற்கு பாடசாலை மாற்ற-ப்பட்டபோது தற்காலிகமாக ஏற்பட்ட சவால்களுக்கு எல்லாம் முகம் கொடுத்து வெற்றி கண்டு இன்று தென்மராட்சியில் முக்கியத்துவம் பெற்ற ஆரம்ப பாடசாலையாக விளங்க வைத்த பெருமை இவரையே சாரும். அர்ப்பணிப்பான சேவையும், பொறுமையும், தன்னடக்கமும், அனைவரையும் அரவணைத்து செல்லும் பக்குவமும் அவரது முகாமைத்துவ வெற்றிக்கு காரணமாக அமைந்தன. பலர் பதவியினால் பெருமை பெறுகின்றனர். சிலரால் பதவி பெருமை பெறுகின்றது. இந்தவகையில் திரு.கா.கந்தசாமி அவர்கள் பதவியை அலங்கரித்து பதவிக்கு பெருமை சேர்த்து ஓய்வு பெறுகின்றார். அன்னார் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**வை.நடராசா**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக்கல்விப் பணிமனை,**
**சாவகச்சேரி.**

(09 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(08 பக்கத் தொடர்ச்சி)

# மணிவிழா வாழ்த்து

## வாழ்த்துரை



யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் அதிபராக கடமையாற்றி 12.10.2021 அன்று மணி விழாக்காணும் பெருமைக்குரிய பேராசான் திரு.காசித்தம்பி கந்தசாமி அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எல்லாம் வல்ல வேம்படி விநாயகரின் ஆசியுடன் நீண்ட காலமாக அதிபராக கடமையாற்றி சிறந்த முகாமைத்துவத்துடன் தலைமைத்துவத்துடனும் துடிப்புடனும் ஆசிரியர்களையும் மாண-வர்களையும் வழிநடத்தி புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு-களைப் பெற்றுத் தருவதற்கு அர்ப்பணிப்புடன் அருஞ்சேவையாற்றியுள்ளார். தமது ஊட்டப் பாடசாலையின் மாணவர்களை எமது பாடசாலையில் கல்வி கற்பதற்கும் வழிப்படுத்தியுள்ளார் இவ்வரிய பல சேவையாற்றிய முதல்வர் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைந்து மகிழ்வோடு நீடூழி வாழ எல்லாம் வல்ல வேம்படி விநாயகர் துணை புரிய வேண்டுகிறேன்.

**அதிபர்,**
**யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.**

## வாழ்த்துச் செய்தி



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் தனது தாய்ப் பாடசாலையான யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்-திலிருந்து 2013 ஆம் ஆண்டு பிரிந்து புதிய இடத்தில், புதிய பரிணாமத்துடன் செயலாற்றத் தொடங்கியது. புதிய ஆரம்ப வித்-தியாலயத்தில் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்று ஒன்பது ஆண்டுகள் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து தென்மராட்சியின் புகழ் பூத்த முன்னணி ஆரம்பப் பாடசாலையாக நிலைநிறுத்திய பெருமைக்குரிய அதிபர் திரு. காசித்தம்பி கந்தசாமி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன். தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் தொடர்ச்சியாக உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும் சிறப்பாக வழிப்படுத்திய பெருமை இவரையே சாரும். அதிபர் அவர்களின் காலத்தில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணி, நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள், மதில்கள், நுழைவாயில் வளைவு, மைதான சீரமைப்பு, திறன் வகுப்பறை என்பன அதிபரின் அயராத முயற்சியினை வெளிக் காட்டுகிறது. இத்தகைய பெருமைகளுக்கு ஆதாரமாக விளங்கிய அதிபர் திரு. கா. கந்தசாமி அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய பாடசாலை ஆசிரியர் கழகம் சார்பாக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.

**என்.எஸ்.தீபன்,**
**செயலாளர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**
**யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்.**

## வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் அகவை அறுபதை நிறைவு செய்து மணி விழா காணும் அதிபர் உயர்திரு. கா.கந்தசாமி அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

திரு.கா.கந்தசாமி அவர்கள் இவ்வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்றதன் பின்னர் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் தனியான ஓர் ஆரம்ப பாடசாலையாக சொந்த நிலத்தில் கால் பதித்துள்ளது.

ஒரு தசாப்த காலமாக மாணவர்களின் கல்விமேம்பாட்டிலும், பௌதீக மனித வளங்களை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டு வருவதிலும் தனக்கென ஓர் தடம்பதித்து இப்பாடசாலையை முன்னேற்றிவைத்த பெருமை அவரையே சேரும்.

இன்று தனது சேவையிலிருந்து ஓய்வு பெறும் பெருமதிப்பிற்குரிய அதிபர் கா.கந்தசாமி அவர்களின் ஓய்வுக்காலம் குடும்ப உறுப்பினர்களுடன் மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் அமைந்து நீடூழி காலம் நலமாக வாழ்கவென வாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**திருமதி சதீசன் சுகல்யா**
**செயலாளர், பாடசாலை அபிவிருத்தி குழு.**

Congratulations

**கல்லூரிச் சமூகம்**

**யா / மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்**

# 31ஆம் நாள் நினைவு தினம்

அன்னை மடியில் 25 . 02 . 1946



ஆண்டவன் அடியில் 13 . 09 . 2021

## அமரர் யூஜின் சுப்பிரமணியம் (மணியம்)

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் விசுவமடு பிரமந்தனாற்றை வசிப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி 2ஆம் கட்டை கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட யூஜின் சுப்பிரமணியம் அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினம்.

*அன்பிற்கு இலக்கணமாய் அவனியிலே வாழ்ந்தீரே!*
*பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீரே!*
*இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்தீரே!*
*நல்லவராய் நாணயமாய் நடந்தீரே!*
*துன்புற்றோர் துயர் துடைக்க துணைக்கரமாய் நின்றீரே!*
*சமூகத்தில் பல சேவை செய்ய முன்நின்றீரே!*
*ஆண்டவன் ஏன் அழைத்தான் உம்மை*
*பண்புள்ளோர் பலகாலம் வாழக்கூடாது என்றோ!*
*கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்*
*போனாலும் எங்கள் முன்னே உங்கள் முகம்*
*எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு*
*மறைந்து நீங்கள் விண் நோக்கிச்*
*சென்றாலும் கண் விட்டு மறையாமல்*
*கனகாலம் இருப்பீர்கள்*
*நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே*
*அன்பானவனே உம் பெயரும் விளங்கும்*
*கல்மனம் படைத்த காலனவன் கவர்ந்தானோ*
*உம் உயிரை*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகின்றோம்.*

மனைவி - றீற்றா
உறவினர்கள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 . 10 . 1941



ஆண்டவன் அடியில் 13 . 10 . 2020

அமரர்
## திருமதி ஜோன் அமிர்தநாயகி

ஆண்டு ஒன்றம்மா
ஆறவில்லை - எம் துயரம்
வாழ்வில் ஒளிவிளக்காய் அனைவருக்கும்
ஒளியேற்றிய தெய்வமே
ஐயா, அக்கா, பெற்றோர், உறவுகளுடன்
இன்புற்றிருக்க சென்ற இந்நாளில்
இதயத்தில் நினைவுகளுடன்
என்றும் வாழும்

**நிரந்தர முகவரி:**
**தோலகட்டி, வயாவிளான்.**
**தற்காலிக முகவரி:**
**அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.**

**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

# இந்திய இராணுவத் தளபதி இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, ஒக். 13

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவானே மற்றும் அவரது குழுவினர் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்தனர்.



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கிய இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம். நரவானே மற்றும் திருமதி வீணா நரவானே ஆகியோரை இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்றார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தின்போது, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கையின் முப்படைகளின் தளபதிகளை இந்திய இராணுவத் தலைமைத் தளபதி சந்திக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெறும் இந்திய-இலங்கை இருதரப்பு மித்ரா சக்தி இராணுவப் பயிற்சியையும் அவர் பார்வையிடவுள்ளார். (து-22)

# 895 கிலோ மஞ்சள் பள்ளிக்குடாவில் மீட்

கிளிநொச்சி, ஒக். 13

பூநகரி, பள்ளிக்குடா கடற்கரையில், சுமார் 12 மூடைகளில் 895 கிலோகிராம் மஞ்சள் கடற்படையினரால் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த மஞ்சளை கடத்தியவர்கள் மன்னார் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டநிலையில் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு விடயத்திலும் தன்னிச்சைப் போக்கிலேயே அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக். 13**

**"புதிய அரசமைப்பை இயற்றும் விடயத்திலும் அரசு தன்னிச்சையாக செயற்பட்டுவருகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடு, தனிப்பட்ட சட்டத்தரணிகள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது"**

என்று எதிரணி பிரதம கொறாடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசமைப்பு இயற்றப்படும், தேர்தல் முறைமை மாற்றப்படும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்துள்ளார். நாட்டில் தற்போதுள்ள மிக முக்கிய பிரச்சினைகளா இவை?

புதிய அரசமைப்பு பற்றி கதைக்கின்றனர். ஆனால் அதற்கான பணி எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது? உலகளவில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இதற்கான பணி இடம்பெறும். எனினும், தனியாருக்கு ஒப்பந்தம் வழங்குவதுபோல, தனக்குத் தேவையான சட்டத்தரணிகளை நியமித்து இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைகளை முன்வைப்பதற்கு எமது கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. எமது சட்டத்தரணிகள் சென்றனர். 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி கருத்து வெளியிட வேண்டாம். அதனைவிடுத்து ஏனைய விடயங்கள் பற்றி குறிப்பிடவும் "என நிபுணர் குழுவினர் நிபந்தனை முன்வைத்துள்ளனர். எனவே, இவ்வாறு செயற்பட்டால் எப்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய யாப்பைத் தயாரிப்பது? இந்த அரசிடம் குழு வேலைத்திட்டம் இல்லை. தன்னிச்சையான முடிவுகளே எடுக்கப்படுகின்றன. 19 ஊடாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டது. எனினும், 20 ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கும் இந்த 20 தான் காரணம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் தோல்வி. ஐரோப்பிய ஒன்றியத்தில் முதல் சுற்றில் தோல்வி. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என தெரியவில்லை. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டினால் மட்டுமே சர்வதேசத்தை வெல்ல முடியும்."

-என்றார். (து-44)

# இலவச பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் 6 மாத கால கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மின்னியலாளர், அலுமினிய உருவமைத்தல், நீர் குழாய் பொருத்துநர், உருக்கி ஒட்டுநர், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், மரப்பொறி இயக்கவியலாளர் மற்றும் தையல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நெறிகள் யாவும் இலவசம் எனவும், பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா அரசாங்கத்தால் வழங்கப்படும்.

அத்துடன் போக்குவரத்துக்கான பருவக்காலச் சீட்டு மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற என்.வீ.கியூ சான்றிதழும் வழங்கப்படும்.

குறித்த பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் நாளை புதன் கிழமைக்கு முன்பதாக பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை அறிய 021 222 0028 அல்லது 021 221 2402 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பை ஏற்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-60)


## காணவில்லை



காணவில்லை! கண்டுபிடித்து தருபவர்களுக்கு வெகுமதி ரூபா- 100,000/=. யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பிரதான வீதி பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில் உள்ள வீதியைச் சேர்ந்த படத்தில் உள்ள பெண் நாயை 05.10.2021 இரவு 8.30 மணிமுதல் காணவில்லை.

கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் 100,000/= ரூபா வழங்கப்படும். நாய் பற்றிய உண்மையான தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்பட்டு இரகசியமும் பேணப்படும். சிறப்பு அடையாளம் கபில நிற (**Brown Colour**) கழுத்துப்பட்டி.

தொடர்பு: **077 6293710, 021 222 3536**



## கணக்கியல் கற்கை

**AAT** பட்டயக் கணக்கறிஞர், **CMA, CIMA, ACCA** ஆகிய கற்கை நெறிகளை யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடி ஆகிய பகுதிகளில் நடாத்துவதற்கு பல வருடங்கள் அனுபவங் கொண்ட பட்டயக் கணக்கறிஞர் ஒருவர் விரும்புகிறார். அதுபற்றி ஓர் ஆய்வாக இந்த கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் தங்களைப் பற்றிய விபரங்களுடன் தாங்கள் கற்க விரும்பும் கற்கை நெறி, கட்டம், பாடங்கள் பற்றி எமக்கு அறிவிக்கலாம்.

தொடர்பு: 0777552284, 0776113992
accountingtutor21@yahoo.com




# சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள்

சாவகச்சேரி,ஒக்.13

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகால் வாழ்வாதார உதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட 61 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தில் இந்த வருடம் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 900 சமுர்த்தி பயனாளிகள் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-9)

# சிறுவர் இல்லங்களுக்கு புத்தகங்கள் கையளிப்பு

மட்டக்களப்பு,ஒக்.13

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி சக்தி மகளிர் இல்லம் மற்றும் திருஞானசம்பந்தர் குருகுலம் ஆகியவற்றில் உள்ள மாணவர்களுக்கான ஒரு தொகுதிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

சிறகுகள் அமையத்தின் படிப்பகம் செயற்றிட்டத்தினூடாக இந்தப் புத்தகங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

சிறகுகள் மட்டு அம்பாறை பிராந்திய தலைவர் பிரியதர்சன் தலைமையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# பணப்பரிமாற்ற செயற்பாட்டுக்கு மிக விரைவில் புதிய செயலி

கொழும்பு,ஒக்.13

பணப்பரிமாற்றத்துக்காக 'SLRemit' என்ற பணம் அனுப்பும் செயலியொன்றை இலங்கை மத்திய வங்கி விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

முறைசாரா வழிகளின் பயன்பாட்டை ஊக்கமிழக்கச் செய்யும் குறிக்கோளுடன் புதிய, குறைந்த செலவிலான பண அனுப்பல் வழிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இலங்கைக்கென புதிய பண அனுப்பல் வழிகளை ஆய்வு செய்து பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு, இலங்கை மத்திய வங்கி குழுவொன்றை நியமித்துள்ளது. இலங்கையின் அரச மற்றும் தனியார் வணிக வங்கிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றில் அனுபவம் பெற்ற தொழில்சார் நிபுணர்கள் இந்தக் குழுவில் உள்ளனர். அதற்கமைவாக அறிமுகப்படுத்தப்படும் புதிய செயலி ஊடாக, வெளிநாட்டு பணம் அனுப்பலை இலகுபடுத்தலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ பரியோவான் கல்லூரி
மாணவன்
செல்வன் யூஜின் டிறோஜன்

க.பொ.த சாதாரண பரீட்சையில் **6A, B, 2C** சித்தி பெற்றுள்ளார். அவரைப் மேன்மேலும் சித்தி பெற்று கல்வியில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா - யூஜின் (எடிசன்),
அம்மா - விஜயகுமாரி (கவிதா)
ம.வேதநாயகம் (விக்டர்)
கொக்கிளாய் மேற்கு,
கொக்கிளாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெலாரஸ் வழியே ஐரோப்பாவினுள் நுழைய இலங்கையர்களும் முயற்சி!

## எல்லையோரம் ஆணின் சடலம் மீட்பு

**மின்ஸ்க், ஒக். 13**

**பெலாரஸ் லித்துவேனியா எல்லைப்பகுதி குடியேற்றவாசிகளுக்கு ஆபத்தான இடமாக மாறியுள்ளது. பெலாரஸ் நாட்டினூடாக ஐரோப்பிய ஒன்றிய எல்லைக்குள் நுழைய முயல்வோர் இரு நாடுகளினதும் எல்லைக்காவல் படைகளால் மாறிமாறிப் பந்தாடப்படும் நிலை அங்கு காணப்படுகிறது.**

பதற்றம் நிறைந்த அந்த எல்லைப் பகுதியில் இருந்து இலங்கையர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டிருப்பதாக பெலாரஸ் ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. கடந்த 5 ஆம் திகதி லித்துவேனியாவுடனான தேசிய எல்லையில் இருந்து 500 மீற்றர்கள் தொலைவில் மீட்கப்பட்ட அந்தச் சடலம் இலங்கையைச் சேர்ந்த 29 வயதுடைய ஆண் ஒருவருடையது என்பதை சடலத்துடன் காணப்பட்ட ஆவணங்கள் மூலம் பெலாரஸ் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் அவரது உயிரிழப்புக்கான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை. மரணத்துக்கான காரணத்தை அறிவதற்காக பிரேத பரிசோதனையும் தடயவியல் சோதனைகளும் நடத்தப்படவுள்ளன என்று பெலாரஸ் அதிகாரிகளை ஆதாரம்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

விசாரணையாளர்கள் அப்பகுதி உள்ளூர் வாசிகளிடமிருந்தும் தகவல்களைச் சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆதரவற்ற மூதாட்டி சாந்தி நிலையத்தில் சேர்ப்பு

சாவகச்சேரி, ஒக். 13

கொடிகாமம் பகுதியில் ஆதரவற்ற நிலையில் காணப்பட்ட யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த 73 வயது மூதாட்டியை கைதடி சாந்தி நிலையத்தில் இணைத்துள்ளனர்.

கடந்த வாரம் கொடிகாமம் பகுதியில் காணப்பட்ட மூதாட்டியை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்த நிலையில், உறவினர்களை உரிமைகோரி அழைத்துச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

பத்திரிகையில் பிரசுரமான செய்தியில் காணப்பட்ட ஒளிப்படத்தைப் பார்த்த பெறாமகள் ஒருவர் சமூக சேவைகள் அலகினருடன் தொடர்பு கொண்டு மூதாட்டிக்குப் பிள்ளைகள் இல்லாத நிலையில் தன்னால் பராமரிக்கப்பட்டு வந்தார் எனவும் தமது வீடு போதிய இடவசதி இல்லாததால் மூதாட்டியை சாந்தி நிலையத்தில் இணைக்கச் சம்மதம் தெரிவித்திருந்தார். மருத்துவமனையிலிருந்து பொறுப்பேற்ற சமூகசேவைகள் அலகினர் கைதடி சாந்தி நிலையத்தில் மூதாட்டியை இணைத்துள்ளனர். (ஐ-9)

## குணவர்தனவுக்கு உயிர் அச்சுறுத்தல்

நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தனவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தனது வீட்டுக்கு அருகே அடையாளம் தெரியாத குழுவினர் வெள்ளைவானில் நடமாடினர். இதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர் கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

அதேவேளை தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஒரு மாதத்துக்கு முன்னர் அவர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்த போதிலும், இதுவரை அவரிடமிருந்து வாக்குமூலம் பெறப்படவில்லை. (ம-4)

## தொடர் மழையால் ஏற்படும் காய்ச்சல்

சாவகச்சேரி ஒக்.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் காய்ச்சல் ஏற்பட்ட பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சாவகச்சேரி சுகாதாரப் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், தமக்கு ஏற்பட்ட காய்ச்சல் வைரஸா, டெங்கா அல்லது கொரோனாவா என்று தெரியாத நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் மற்றும் கொரோனா அறிகுறிகள் காணப்படின் பிரதி செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திற்கு வருகைதந்து அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். (ஒ-ரி1-9)

## உரத்தால் இழப்பு ஏற்படின் விவசாயிகளுக்கு நிவாரணம்

### அரச தரப்பு தெரிவிப்பு

உரப்பிரச்சினையால், விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையின் போது இழப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு தயாராகவுள்ளது என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

விவசாயிகளின் உரப் பிரச்சினையைத் தீர்க்க விசேட திட்டமொன்றை அரசு ஆரம்பித்துள்ளது. ஆனால் எதிர்க்கட்சியினர் நாட்டில் மாறுபட்ட கருத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். எனவே, நாடு குறித்து சிந்தித்து சரியான முடிவை நாங்கள் எடுத்துள்ளோம். எங்கள் விவசாயிகளுடன் இணைந்து இந்தப் பிரச்சினையை நிச்சயம் வெற்றி கொள்வோம்- என்றார். (ம-4)



## மாணவர்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

மரங்களின் முக்கியத்துவத்தையும் நன்மைகளையும் மாணவச் செல்வங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்குடன் மாணவர்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

வன்னி தமிழ் மக்கள் ஒன்றிய அனுசரணையுடன் எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகத்தின் ஏற்பாட்டால் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதிபர் தர்மபுத்திரன். தயானந்தன் தலைமையில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் குலசிங்கம் திலீபன் மற்றும் எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகத் தலைவர் லிங்கநாதபிள்ளை கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி1)

## தாய்க்கும் சேய்க்கும் பால்வார்த்து அஞ்சலி

### மனதை நெகிழ வைத்த சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக்.13

தாயும் சேயும் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் அவர்களது உறவினர்கள் பால்வார்த்து அஞ்சலி செலுத்தினர்.

மனதை நெகிழ வைத்த இந்தச் சம்பவம் வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

2015 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தாயான சயிந்திகாவுக்கும், அவரது மகனான பொபிஷணனுக்கும் உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த சயிந்திகா தனது குழந்தையுடன், வவுனியா முருகனூர் கிராமத்துக்குக் கணவனுடன் சென்றுள்ள நிலையில், அன்றைய தினமே படுகொலை செய்யப்பட்டனர்.

மகளிடமிருந்து எந்தத் தொடர்பும் இல்லாத நிலையில் பெற்றோர் பொலிஸ் நிலையம், மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட இடங்களில் முறைப்பாடு செய்தனர்.

அதனடிப்படையில் ஆறு வருடங்களின் பின்னர் கடந்த ஓகஸ்ட் மாதம் சயிந்திகாவின் கணவன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையில் தனது மனைவியையும், குழந்தையையும் தானே கொலை செய்தேன் என்று சந்தேகநபர் ஒப்புக் கொண்டார்.

இருவரையும் கொன்று புதைத்த இடமான முருகனூர் பகுதியில் அமைந்துள்ள ஒரு பாழடைந்த வீட்டையும் அவர் அடையாளங்காட்டினார்.

இதனையறிந்து அவர்களின் உறவினர்கள், இருவரினதும் ஆத்மா சாந்தியடைய, புதைக்கப்பட்ட இடத்தில் பால் வார்த்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். (ஒ-4-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K.P. திருமண சேவை

எம்மிடம் எல்லா இன மத மணமகன் மணமகள் யாதகம் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். பதிவு கட்டணம் இல்லை.

தொடர்புகளுக்கு: 077 0050 344
KPthirumanam.com

## விற்பனை உதவியாளர் தேவை

யாழ்ப்பாணம் பிரபல்யமான புத்தக சாலைக்கு உடனடியாக உதவியாளர் தேவை. ஆண்/பெண்

011 576 5331 /077756 8883

# இந்திய இராணுவத்தினர் நடத்திய 55 பேர் படுகொலையின் 35ஆவது நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஒக். 13

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் கொக்குவில் பிரம்படி பகுதியில் நேற்றுக் காலை 6.30 அளவில் நடைபெற்றது.

இதன்போது பிரம்படியில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு ஈகைச்சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்தநிகழ்வில், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரான ஜெயாகரன், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி நள்ளிரவிலிருந்து அதிகாலை வரையான நேரத்துக்குள் கொக்குவிலைச் சேர்ந்த 55பேர் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-27)

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி நவமலர் யேசுதாசன் பேதுருப்பிள்ளை

வட்டு கிழக்கைப் பிறப்பிடமாகவும் சென் பீற்றர் வீதி. நவாலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி நவமலர் யேசுதாசன் நேற்று (12.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை, பூரணம் தம்பதியரின் மகளும், பேதுருப்பிள்ளை ஞானம்மா தம்பதியரின் மருமகளும், திரு.யேசுதாசன் பேதுருப்பிள்ளை (ஓய்வு நிலை உதவி முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், கிறிஸ்டி தெய்வேந்திரன் (றஞ்சித் - லண்டன்), கிறிஸ்டீன் றமணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற றஞ்சிதமலர் இரத்தினம் மற்றும் அல்பிரட் சின்னத்துரை (ஓய்வுநிலை தபாலதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி பி.எவ்.சின்னத்துரை (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் மைத்துனியும், அமல் பிரதீபாவின் அன்பு மாமியாரும், செறின், அபிநயா, ஜோனத்தன் அவர்களின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (13.10.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, நவாலி சென் பீற்றர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 2255 173**

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05.10.1948 ஆண்டவர் மடியில்: 13.09.2021

### திருமதி குணபாலராஜா புஸ்பராணி (புஸ்பம்-மம்மி)

**"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"**

பூவுலகில் பூத்த மலர்
புஸ்பங்களின் ராணியென
குணபாலராஜ கரம் பற்றி
குதூகலமாய் வாழ்ந்ததனால்
பிள்ளைகள் செல்வமாய் மம்மியானார்

பக்குவமாய் பாவை யென
பண்புடனே அன்பு விருந்தோம்பலுடன்
எவ்வுயிர்க்கும் இன்னுயிராய் வாழ்ந்திருந்தாய்
எல்லோரும் விரும்பும் மம்மியே
சொல்லாது எங்கு சென்றாய்

ஆறாது உம் மறைவு
அணையாது உம் நினைவு
இளைப்பாற வேண்டும் என்று
ஆண்டவர் உம்மை அழைத்தாரோ
ஆண்டவருக்குள் இறைப்பாற
காலமெலாம் வேண்டுகின்றோம்.

13.09.2021 அன்று காலமான எமது தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**28/1, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 10 . 1989



இறப்பு 12 . 10 . 2021

### திரு. சயந்தன் தினேஷ்குமார்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சயந்தன் தினேஷ்குமார் அவர்கள் நேற்று (12.10.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சயந்தன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ் பல்கலைக்கழகம்) நில்மினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் சுந்தரலிங்கம், சுபத்திராதேவி கேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், நிருஷாந்தன், லாவண்யா, குகச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தரங்கிணி சித்தாத்குமார் அவர்களின் அன்பு மைத்துனரும், பிரேம்குமார், மனோஜ்குமார், அஜித்குமார் அவர்களின் அன்பு மருமகனும், நிர்மலாவின் பெறாமகனும், பிரிதீஸ் சங்கேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2021) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்,**
**தொ.பே.இல.077 658 9637**
**076 310 0635**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 . 07 . 1926



ஆண்டவன் திருவடியில் 13 . 09 . 2021

### அமரர் அன்னம்மா முத்துக்குமாரு

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்....
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும், உயிர்வாழும்

எமது அன்னையின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் மற்றும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் அனுதாப பங்களை தெரிவித்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

**வீரக்கொடியர் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

**பிரிவினால் துயருறும் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பாலசிங்கம் நடனகுமார் (சிவா)

அன்பிற்காக அன்னையின் மடியில் சரண்
12.02.1962

அழைத்து சிதம்பர நடராஜன் திருப்பாதக் கமலங்களில் சரண்
10.10.2005



திதி : புரட்டாதி மாத பூர்வபட்ச அட்டமி (13.10.2021)

**என்றும் மாறாத நினைவே!**


எமது அருமைச் சிவாவே!
எம் நெஞ்சங்களின் உணர்வே!
ஏங்கித் துடிக்கும் எம் மனமே!
ஏனோ ஈரம் காயாத கண்களே!
இன்றும் மறவாத உன் நினைவே!
இறையடி தேடிய நின் ஜீவனே

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்

உன் அன்புப் பிரிவால்
துயருற்றிருக்கும்
**குடும்பத்தினர்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (13.10.2021) அன்று சிவபதமடைந்த

**அமரர் நல்லையா சிவகுருநாதன் [சந்திரன்]**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அமெரிக்காவில்
இன்று (13.10.2021) புதன்கிழமை நடைபெறும்.
இன்றைய தினத்தில் அவரது சகோதரரான
திரு.இ.தர்மராசா (தம்பியன்) இல்லத்தில்
நினைவஞ்சலிப் பிரார்த்தனை இடம்பெறும்.

**திரு.இ.தர்மராசா (தம்பியன்)**
**இராஜாராணி பவனம்,**
**உரும்பிராய் மேற்கு.**

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 4:21



### விஜயச்சந்திரன் டினேஸ்

(சென் ஜோன்ஸ் கல்லூரி. 2013 வர்த்தகப் பிரிவு மாணவன்)

நிஜமானது
07.11.1994

நிழலானது
13.10.2012

என் செல்ல மகன் டினே

எம்மை விட்டு பிரிந்து ஒன்பது ஆண்டுகள் வெகு விரைவில் சென்று விட்டதையா?

ஒன்பது ஆண்டுகள் அல்ல தொன்னூறு ஆண்டுகள் சென்றாலும் உனை மறைக்க யாரும் இல்லை இவ்வுலகில்

என் செல்ல மகனே

குலம் விளங்கவென்று வந்த கோமகனே பலமிழந்து போனோமையா? ஆனாலும் நீர் தேடிய நல் மரியாதை எம்மை தலை நிமிர வைத்தாய் ஐயா?

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் என்ற பொய்யா மொழி புலவரின் வாக்கிற்கிணங்க உன் தாய் தந்தையை மகிழ்வில் ஆழ்த்தினாய்.

துன்பங்கள் எம்மை சூழ்ந்த போதும் நீர் வாழ்ந்த நாட்களில் நீர் எத்தனையோ நல்ல காரியங்கள் செய்ததை மற்றவர்கள் சொல்லும் போது இப்படித்தான் வாழ வேண்டும். என்று எடுத்துக் காட்டியுள்ளாய்.

நீர் நடந்த பாதையெல்லாம் நெருஞ்சி முள்ளாய் குத்துதையா!

மண்ணில் உன் ஜனிப்பு வீண் அல்ல விண்ணில் வேந்தனின் நற் செய்தி பூமியில் பறை சாற்றி ஓய்ந்த ஒலி பெருக்கி

குலம் செழிக்க வந்த கோமகனே எங்கு சென்றாய்? நீர் ஓய்வு எடுத்த போதும் ஓய்வின்றி ஒலிக்கும் நீர் கூறிய ஆண்டவரின் வார்த்தைகள் எம் செவிகளில் இனி

உன் தாய் உமை சுமந்த வலியை விட உன் பிரிவால் சுமக்கும் வலியை அறிவாயோ!

இம் மண்ணில் உம்மை பிரிந்தாலும் விண்ணில் உம்மைக் காண்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாட்களைக் கழிப்போம்

நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே

38/46, சிவன் புது வீதி,
மணல்தறை,
கந்தர்மடம்

என்றும் உன் நினைவுகளுடன்
**பெற்றோர்**

## வீடு வாடகைக்கு தேவை

மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றுக்கு.

**070 156 9282**

## AGRO LANKA OPTICAL AND DENTAL WORKS

### அக்ரோ லங்கா

பல் மூக்கு கண்ணாடி விற்பனையகம்

**கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குமிடம் பல் கட்டுமிடம், மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்**

கொரோனா பேரிடர் காரணமாக பொருளாதார ரீதியில் கஸ்டத்தை எதிர்நோக்கியுள்ள எமது மக்களுக்காக எம்மால் முடிந்த எமது சேவையாக அனைத்து மூக்குக் கண்ணாடிகள் மற்றும் பல் கட்டுதல். கிளிப் அனைத்துக்கும் விஷேட 50% விலைக்கழிவுடன் வழங்குகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம். விரைந்து வந்து பயன்பெறுங்கள்.

**இல.634, ஆஸ்பத்திரி வீதி,**
**(வேம்படி சிக்னல் மகிந்திரா கார் கம்பனி அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
**Phone: 074 0060 269, 070 4614 263**
**email: Agrolankaoptical@gmail.com**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் செல்வி டினோசியா ஸ்ரீவாணன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 13 |
| - | - |
| 03 | 09 |
| - | - |
| 1999 | 2021 |

எமது சமாசப் பொது முகாமையாளர் திருமதி சுகதர்சினி ஸ்ரீவாணன் அவர்களின் சிரேஸ்ட புதல்வி அமரர் செல்வி டினோசிகா ஸ்ரீவாணன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய**
**வங்கிகளின் சமாசம்**
**யாழ்ப்பாணம்**

## பதவி வெற்றிடம்

இலங்கையின் பிரபல நிதி நிறுவனம் ஒன்றின் துணை நிறுவனமான காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு யாழ் மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளைகளுக்கான பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.



✓ **நிதி திட்டமிடலாளர்**

- வயதெல்லை - 18 இலிருந்து 45
- க.பொ.த. சாதாரணதர (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளருடன் சிறந்த தொடர்பாடல் திறன். மற்றும் வாடிக்கையாளர் சேவை.


✓ **அணித்தலைவர்**

- வயதெல்லை - 20 இலிருந்து 45
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- காப்புறுதி / சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
- ஒரு அணியை கொண்டு நடாத்தும் திறன்.

மேற்குறித்த பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையினை (CV) கீழ்வரும் முகவரிக்கு / மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**WhatsApp : 077 0088 165**
**Viber : 077 0088 165**
**g-mail : shantharupan85@gmail.com**

# கைதடி, நாவற்குழியில் இன்று தடுப்பூசி ஏற்றல்



சாவகச்சேரி, ஒக். 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றும் கிராமமட்ட நடமாடும் சேவையை இன்று தொடக்கம் நான்கு நாள்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, பிரதேசத்தில் இதுவரை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்கு முதலாம் கட்ட தடுப்பூசியும், ஏற்கனவே முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் ஏற்றப்படவுள்ளது.

அதன்படி, இன்று கைதடி மற்றும் நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் நாளை சாவகச்சேரி நகரம் மற்றும் மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மந்துவில் மற்றும் வரணி பிரிவுகளிலும் 16 ஆம் திகதி சனிக்கிழமை கொடிகாமம் மற்றும் எழுதுமட்டுவாழ் பிரிவுகளிலும் கிராம மட்ட நடமாடும் தடுப்பூசி ஏற்றப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர். (த-9)

---

*தொற்று...*

காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 735 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 10 ஆயிரத்து 301 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 90 ஆயிரத்து 800 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 12 பெண்களும் அடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் குறித்த சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 377 ஆக அதிகரித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 31.08.1938 மறைவு: 13.09.2021

### சேனாதிராசா பாக்கியவதி

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.10.2021) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சைவப் பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 08 . 1943

மறைவு 07 . 10 . 2021

### தம்பியப்பா செந்தில்நாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், மின்பொறியியலாளர்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இல.91, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா செந்தில்நாதன் கடந்த வியாழக்கிழமை (07.10.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் தம்பியப்பா-சிவபாக்கியம் தம்பதியரின் அருமைப் புதல்வனும், தர்மலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்புலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலவேணி, விமலாதேவியின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலசுந்தரம், காலஞ்சென்ற பத்மலோஜினி, சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கௌசல்யா, அகல்யா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன், லாகவன், இந்துஜா ஆகியோரின் அன்பு மாமனும், பிரகல்யா, பிரியங்கா, பிரவீனா, சமீரா, துர்லா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2021) புதன்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.91, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
021 205 2201

## PHP Developers & Trainees needed

Excellent opportunity to be part of the web development team.
Norway based IT Company in Jaffna, Sri Lanka.

**Qualifications & Experience**

- Experience in developing with HTML5, CSS/3, PHP, Laravel, jQuery, AJAX, Bootstrap and MySQL.
- Knowledge in API's would be added advantage.
- Minimum Two year's experience in web Development for PHP Developers.
- Can apply Without prior experience for trainees (TWO vacancies )

**Salary is negotiable and will commensurate with qualifications and experience**

Apply with your CV detailing your qualification and work Experience,
latest by 30th October 2021, at: task@portu.no
Contact No: 0778614519

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 06 . 09 . 1932

மறைவு 12 . 09 . 2021

### உயர்திரு அமரர் கணபதி சின்னத்தம்பி

(திதி : ஷஸ்டி)

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு கணபதி சின்னத்தம்பி அவர்கள் கடந்த (12.09.2021) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தேவையான உதவிகளைச் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். இன்று (13.10.2021) புதன்கிழமை அந்தியேட்டி நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

நினைவுகளுடன்

இராசமணி வாசம்,
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்.
076 9026 483

## மரண அறிவித்தல்



### முத்தையா கதிரவேலு

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கதிரவேலு நேற்று (12.10.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா லட்சுமியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்வள்ளி நாயகியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு சகோதரும், ஸ்ரீகணேசகுமாரின் பாசமிகு தந்தையும், சுகிதாவின் பாசமிகு மாமனாரும், வித்யாசினியின் அன்பு பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம், நகுலேஸ்வரன், காலஞ்சென்ற பொன்மலர், வரதாம்பிகை, சிவகுமார், சுகுமார், ஜெயலலிதா, ராஜ்குமார், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2021) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேஸ் : 077 465 4938
தீபன் : 077 949 1694

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வருட...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"நான் உறுதியளித்தவாறு, புதிய அரசமைப்பு ஒன்றை வழங்குவதற்கு, அடுத்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுப்பேன்" என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இலங்கை இராணுவத்தின் 72ஆவது ஆண்டுப் பூர்த்தியையொட்டி அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரைக்குப் பதில் வழங்கும் வகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து ஆராய ஜனாதிபதி நிபுணர் குழுவொன்றை நியமித்திருந்தார். அந்த நிபுணர்குழு நியமிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இதன் முன்னேற்றகரமான நகர்வுகள் என்ன?, இப்போது எந்தக் கட்டத்தில் இந்த முயற்சிகள் உள்ளன என்று நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியாது. எமக்கும் இது குறித்த அறிவிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

எனினும், அரசியல் சாசனம் ஒன்று புதிதாக உருவாக்கப்படுகின்றவேளையில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகள் சம்பந்தமாக நிரந்தரமான தீர்வு அதுவும் பக்குவமான தீர்வு கிடைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாட்டில் முப்பது வருடங்கள் போர் நடைபெற்றது. நாட்டில் நீண்ட காலமாக அமைதியின்மை காணப்பட்டது. இவ்வாறான சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்னவென்றால், தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தாமை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஆட்சியாளர்கள் நினைக்காதமையாகும்.

தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையில் அவர்கள் ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் தமது ஜனநாயக உரிமைகளுக்கு முறையான அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் செயற்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் சகல உரிமைகளும் நாடு முழுவதும் பயன்படுத்தக் கூடிய வகையில் இருக்க வேண்டும். அவ்வாறு அமைய வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமைகளையும் அங்கீகரித்த நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டால் தான் சாத்தியப்படும். ஆகவே, நாட்டில் முறையான அரசியல் சாசனம் உருவாகினால் மட்டுமே அபிவிருத்தியும், முன்னேற்றமும், அமைதியும் ஏற்படும்.

ஆகவே, சகல மக்களின் உரிமைகளையும் உள்ளடக்கிய புதிய அரசியல் சாசனம் எந்தவித தாமதமும் இல்லாது விரைவாக உருவாக்கப்பட வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டு நிற்கின்றது" என்றார். (த-22)

## எரிபொருள்...

மூலமாக விநியோகிக்கப்படும் எரிபொருளின் விலையை அதிகரிக்குமாறு அரசிடம் கோரியுள்ளது. அதன்படி, டீசல் விலையை லீற்றருக்கு 25 ரூபாவாலும், பெற்றோல் விலையை லீற்றருக்கு 16 ரூபாவாலும் அதிகரிக்க ஐ.ஓ.சி. அனுமதி கோரியுள்ளது. உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்வு காரணமாக, இலங்கையிலும் விலை அதிகரிக்கப்படவேண்டும் என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் எரிபொருள் விற்பனையால் இழப்பு ஏற்படுவதாக குறித்த நிறுவனம் அரசுக்கு தெரிவித்துள்ளது. (த)

## எரிபொருள்...

தைக்கு அதிகரிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிப்புரையை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்படி பணிப்பை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் சடுதியாக நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

கோதுமை மா, சீமெந்து, பால்மா, எரிவாயு மற்றும் கோதுமை மா உற்பத்திகளான பாண், பணிஸ், கொத்து போன்றனவும். றைஸ் மற்றும் பால்தேநீர் உள்ளடங்கலாக சிற்றுண்டிகளின் விலைகளும்அதிகரிக்கப்பட்டன.

இவை மட்டுமன்றி, பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் எனவும் தனியார் போக்குவரத்துச் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## எரிபொருள் விலை...

தவிர்க்கமுடியாததொன்று. எனவே, எந்தக் காலப்பகுதியில், எப்படியான மாற்றம் இடம்பெறும் என்பது குறித்து நிதி அமைச்சரும், துறைசார் அமைச்சரும் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுப்பார்கள். " என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில், எரிபொருள் விலை சம்பந்தமாக எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பொருள்களை உலக சந்தையில் நிலவும் விலைக்கேற்பவே கொள்வனவு செய்யவேண்டிவரும். அந்தவகையில் உலக சந்தையில் சமையல் எரிவாயு, எரிபொருள், பருப்பு உட்பட பல பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.

இதற்கு புறம்பாக கப்பல் கட்டணம் உள்ளிட்ட சேவைகளின் விலையும் அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் அதிக விலைக்கு கொள்வனவுசெய்து, இங்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியாது. அவ்வாறு எரிபொருளை வழங்குவதால் ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும் என வலுசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து இவ்வாறு நஷ்டத்தில் இயங்கினால் பெற்றோலியக்கூட்டுப்பாதனம் ஸ்தம்பித்துவிடும். எனவே, எரிபொருள் விலை மாற்றம் என்பது தவிர்க்கமுடியாததொன்று. அது எப்போது, எவ்வாறு இடம்பெறும் என்பது பற்றி துறைசார் அமைச்சரும், நிதி அமைச்சரும் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பார்கள்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளில் இலங்கையைவிடவும் அதிக விலைக்கே அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பெருந்தொற்றின் பின்னர் உலகில் இவ்வாறான நெருக்கடி ஏற்படுவது வழமை. ஆனால் 2020 மற்றும் 2021 காலப்பகுதியிலேயே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பலர் தொழில் இழந்துள்ளனர். வறுமை மட்டம் அதிகரித்துள்ளது. " என்றார்.

இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிக்கும் என்ற விடயத்தை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவும் நேற்றுமுன்தினமும் குறிப்பிட்டிருந்தார். (த-44)

## ஆசிரியர்களின்...

ஆசிரியர்களும் அதிபர்களும் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்வு

நேற்று அலரி மாளிகைக்குச் சென்ற ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினர் மூன்றரை மணித்தியாலங்களுக்கும் மேலாக பிரதமருடன் கலந்துரையாடினர். ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது இரண்டு கட்டங்களின் கீழ் இந்த பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

முதலில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் கீழ் முதற்கட்ட கொடுப்பனவை வழங்கவும், இரண்டாம் தவணையையும் ஒருங்கிணைத்து ஜனவரி மாதத்தில் அடுத்த கொடுப்பனவை வழங்கி இரண்டு கட்டங்களில் இந்த விடயத்தை நிறைவு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (த-இ)

## வடக்கை...

குற்றச்சாட்டில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 65 பேர் திருகோணமலையில் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். தேசிய புலனாய்வுச் சேவைக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமையவே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

படகு மூலம் வெளிநாட்டுக் குச் செல்வதற்காக அவர்கள் திருகோண மலையிலுள்ள ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்துள்ளனர். அதன்போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் 63 ஆண்கள், பெண் ஒருவர் மற்றும் 4 வயதுச் சிறு குழந்தை ஒன்றும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் சட்டவிரோதமாக நியூசி லாந்துக்குப் பயணிக்க முயற்சித்துள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-22)

## அரசு...

என்னவென்பதை அறிந்து கொள்வதற்கு மாகாணசபை அல்லது உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அரசு நடத்த வேண்டும்." என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தொடர் விலை உயர்வு மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று வெளியிட்ட கருத்துகளின் தொகுப்பு வருமாறு,

"நல்லாட்சியின்போது மேடைகளில் வெங்காயத்தை தூக்கி காண்பித்து 'தெங் செபத'? (இப்போ சுகமா) என மஹிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பினார். இன்று நூற்றுக்கு 85 வீதத்தால் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. இதற்கு மஹிந்த கூறும் பதில் என்ன?

உலக சந்தையில் விலை உயர்வு இடம்பெறும்போது, நாட்டிலும் அதிகரிப்பு இடம்பெறுகின்றதெனில் அரசு எதற்கு, அமைச்சரவை எதற்கு, என விமல் வீரவன்ச உள்ளிட்டவர்கள் வினா தொடுத்தனர். தற்போது மௌனம் காக்கின்றனர். இதன்மூலம் அவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் புலப்படுகின்றது.

நாட்டில் அரசு செத்துவிட்டது. அமைச்சரவை செல்லாக் காசாகிவிட்டது. கறுப்புக்கடை வியாபாரிகளும், ஏனையோருமே தீர்மானம் எடுத்து, நடைமுறைப்படுத்துகின்றனர். மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளது. வாழ்க்கைச்சுமை குறைக்கப்படும் என்ற உத்தரவாதம் மஹிந்த தரப்பால் வழங்கப்பட்டது. இன்று என்ன நடக்கின்றது? எனவே, மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தலொன்று அவசியம்- என்றனர். (த-44)

## கைவிடப்படும்...

கடைகளில் மண்ணெண்ணெய் அடுப்புகள் ( குக்கர்கள்) தாராளமாக விற்பனையாகின்றன என்று கூறப்படுகின்றது.

நாட்டில் இரண்டு முக்கிய எரிவாயு நிறுவனங்களான லிற்றோ மற்றும் லாப்ஸ் ஆகியன எரிவாயு விலையை உயர்த்தியுள்ளன. குறித்த விலையுயர்வு கட்டுக்கடங்காத நிலைக்குச் சென்றுவிட்டநிலையில், பொதுமக்கள் எரிவாயுவுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

இந்தநிலையில், கொழும்பிலுள்ள மக்கள், நேற்று காஸ்பஹாவை சுற்றியுள்ள கடைகளில் மண்ணெண்ணெய் அடுப்புகள் வாங்கக் கூடியமை அவதானிக்கப்பட்டது.

அங்குள்ள வர்த்தகர் ஒருவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் இது பற்றிக் கேட்டபோது, "இன்று 50 க்கும் மேற்பட்ட மண்ணெண்ணெய் அடுப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன" என்று கூறியுள்ளார்.

அவரது கடை போன்றே ஏனைய கடைகள் பலவற்றிலும் மண்ணெண்ணெய் அடுப்புகள் தாராளமாக விற்பனையாகின்றன என்று கூறப்படுகின்றது.

எரிவாயு மட்டுமன்றி ஏனைய பொருள்களின் விலையையும் அரசாங்கம் கண்மண்தெரியாது அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் விலை அதிகரிப்பை எதிர்கொள்ளமுடியாத நிலையில் திண்டாடுகின்றனர்.

குடும்பச் சுமையை, வாழ்வாதாரத்தை எப்படி இலகுவாகக் கொண்டுநடத்தலாம் என்று ஒவ்வொரு குடும்பத்தினரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையிலேயே, எரிவாயுவைத் தூக்கிக் கடாசிவிட்டு மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாள்கள் தேவை**

**ஒப்பந்தகார நிறுவனம் (கட்டம் / வீதி) ஒன்றிற்கு கூலியாள்கள் தேவை.**

மாதாந்தம் கூலி : 45000/=
மேசன்: 54000/=

உணவு, தங்குமிடம் இலவசம்

**075 220 1981**

**கனரக வாகன சாரதி தேவை**

யாழ்ப்பாணம் சிறிகுமரன் ஹாட்வெயர் ஸ்ரோருக்கு கனரக வாகன சாரதி தேவை.
விண்ணப்பங்களை தபால் மூலமாக அல்லது நேரடியாக அனுப்பி வைக்கவும்.

சிறி குமரன் இரும்பகம்
No. 83, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 8304

**வேலை வாய்ப்பு**

**ஆங்கில மருந்து மொத்த விற்பனை நிலையத்திற்கு**

பின்வரும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- **கணினி உதவியாளர்** - (பெண்கள்) (வயதெல்லை 19 வயதுற்கு மேல்)
- **களஞ்சிய உதவியாளர்** - (இருபாலாரும்)

- அனுபவத்திற்கு ஏற்றவாறு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- ஆர்வமுள்ளவர்கள் சுய விபரக்கோவையுடன் நேரில் வரவும்

**வனிக்கா மெடிக்கல்ஸ்**
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6291

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம்
01 . 03 . 1999

மறைவு
13 . 09 . 2021

கடந்த 13.09.2021 அன்று இறைபதமடைந்த எமது செல்வம்

அமரர்

**செல்வி டினோசிகா ஸ்ரீவாணன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (11.10. 2021) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம் பெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (13.10.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் இறைபதமடைந்த துயரச் செய்தியைக் கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும், துண்டுப் பிரசுரம், வெளியிட்டவர்கள், பத்திரிகைகளில் பிரசுரித்த வர்கள், உணவளித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
077 222 4186

குடும்பத்தினர்.

## தப்பியது பிராவோவின் சாதனை



டுபாய், ஒக். 13

ஒரு சீசனில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற பிராவோ வின் சாதனை தொடர்ந்தும் தக்கவைக்கப் பட்டுள்ளது.

ஒரு சீசனின் அதிக இலக்குகளைக் கைப் பற்றிய வீரர்களின் பட்டியலில் பிராவோ 32 இலக்குகளுடன் முதலிடத்தில் இருந்தார். இந்த வருடம் 32 இலக்குகளைக் கைப் பற்றி அவரைச் சமன் செய்துள்ளார் ஆர்.சி.பி வீரரான ஹர்சல் பட்டேல். ஆர்.சி.பி. அணி தொடரில் இருந்து வெளியேறாமல் இருந்திருந்தால் பிராவோவின் சாதனை முறிய டிக்கப்பட அதிக வாய்ப்புக்கள் இருந்தன. (ம)

அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

Closing Date 09.11.2021

அமெரிக்க லொத்தர் விசா

DV-2023

இன்றே உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு Passport அவசியம்

Thirumurugan Com Net பொதிகள் சேவை

321, K.K.S. Road, Jaffna. 0777 554 528

# வெளியேற்றப்பட்டது பெங்களூர்

## இரண்டாவது தகுதியாட்டத்தில் கொல்கத்தா, டெல்லி மோதல்!

டுபாய், ஒக். 13

**ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடை பெற்ற விலகல் ஆட்டத்தில் தோல்வியடைந்து வெளி யேற்றப்பட்டது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ். இதையடுத்து இன்று நடைபெறும் இரண்டாவது தகு தியாட்டத்தில் டெல்லி, கொல்கத்தா அணிகள் மோத வுள்ளன.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆர்.சி.பி. அணித்தலைவர் கோலி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆட்டம் நடைபெற்றது சார்ஜா மைதா னத்தில் சார்ஜாவில் இரவில் பனிப் பொழிவு அதிகம் இருக்கும் என்ப தால் இரண்டாவதாகப் பந்துவீசுவது சிரமம். எனவே கோலி முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்வார் என்று எதிர்பார்க்கையில் அவர் துடுப் பாட்டத்தைத் தெரிவுசெய்து அதிர்ச்சி யளித்தார்.

ஆரம்ப வீரர்களான படிக்கல், கோலி இருவரும் சிறப்பாகவே துடுப்பெடுத்தா டினார்கள். பந்து களை விரயமாக்காமல் குறைந்தது ஓர் ஓட்டத்தையேனும் எடுத்து தமக் குள் பரிமாற்றத்தை (ஸ்ரைக் றொட் டேட்) வெளிப்படுத்தியமை சிறந்த வியூகமாக அமைந்தது. அணி 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலை யில் 21 ஓட்டங்களுடன் படிக்கல் ஆட்டமிழந்தார். இந்த இலக்குச்சரி வின் பின்னர் பெங்களூரின் முன்வ ரி சையைத் தகர்த்தெறிந்தார் நரைன். பாரத், மக்ஸ்வெல், வில்லி யர்ஸ், கோலி என அத்தனை முது கெலும்பு வீரர்களையும் தனியாளாக வெளியேற்றினார் நரைன். இதன் பின்னர் பெங்களூரின் ஓட்ட எண் ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட் டது. முடிவில் 7 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே பெங்களூர் பெற்றது.

பந்துவீச்சில் நரைன் 4 இலக்குகளை யும், பெர்குசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல் கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்கள் சுப்மன் கில், வெங்கடேஸ் இருவரும் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்த னர். 18 பந்துகளில் 29 ஓட்டங்க ளைக் குவித்து ஆட்டமிழந்தார் கில். திரிபதி நேற்று ஏமாற்றினார். எனி னும் வெங்கடேஸுடன் ரணா இணைந்து ஆட்டத்தை பெங்களூரி டம் இருந்து பறித்தெடுத்தனர். 26 ஓட்டங்களுடன் வெங்கடேஸ் ஆட்ட மிழந்தார். வெங்கடேஸ் ஆட்டமிழந் தபோது ஆர்.சி.பியும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஏதுநிலை உருவா கியிருந்தது. எனினும் நரைன் தான் எதிர்கொண்ட முதல் 3 பந்துகளிலும் சிக்சரை விளாசி பதற்றத்தைக் குறைத்தார். 2 பந்துகள் மீதமிருக்க வென்றது கொல்கத்தா. (ம)

# ஆர்.சி.பியை விட்டு ஒருபோதும் பிரியேன்

## கோலி வெளிப்படை



டுபாய், ஒக். 13

ஐ.பி.எல். தொடரில் இருந்து ஆர்.சி.பி. வெளி யேறிய நிலையில், அந்த அணியைவிட்டு வில கமாட்டேன் என்று தெரிவித்துள்ளார் கோலி.

இந்தத் தொடரின் பின்னர் ஆர்.சி.பி. அணியின் அணித்தலைவர் பொறுப்பில் இருக்கப்போவ தில்லை என்று கோலி அறிவித்திருந்தார். இத னால் அவருக்கும் ஆர்.சி.பி. நிர்வாகத்துக்கும் இடையில் மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கோலி ஆர்.சி.பி. அணியில் இருந்து விலகப் போகின்றார் என்றும் கருத்துப் பகிரப்பட்டது. இந்த நிலையிலேயே உடனடியாக இந்த வதந்திக ளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் கோலி. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.